இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 82 – ஒலி: 80 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஐப்பசி 12 – ஞாயிற்றுக்கிழமை 29 அக்டோபர் 2023 – திருச்சி ★ ★ 12 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 82 - Issue 80: Thiruvalluvar Year - 2054 - Ayppasi 12 - Sunday 29 October 2023 - Trichy ★★12 Pages ₹5.00

## நீட் விலக்கு மசோதாவிற்கு

# உடனே ஒப்புதல் வழங்குவீர்!

## குடியரசுத் தலைவரிடம் முதல்வர் மு.க.ஸ்டாலின் நேரில் வலியுறுத்தல்!



இந்திய கடல்சார் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் கலந்துகொண்டு, புதுதில்லி புறப்பட்டுச் செல்லும் இந்தியக் குடியரசுத் தலைவர் திருமதி திரவுபதி முர்மு அவர்களை, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை விமான நிலையத்தில் நேற்று முன்தினம் (27.10.2023) வழியனுப்பி வைத்து, தமிழ்நாடு இளங்கலை மருத்துவப் பட்டப்படிப்பு மாணவர் சேர்க்கை சட்டமுன்வடிவு 2021க்கு விரைந்து ஒப்புதல் அளிக்க வேண்டுமென வலியுறுத்தி இதுதொடர்பாக தான் எழுதிய கடிதத்தை இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களிடம் வழங்கினார்.

**சென்னை, அக்.29-**

**“தமிழ்நாடு அரசின் நீட் விலக்கு மசோதாவிற்கு, மேலும் தாமதமின்றி உடனடியாக ஒப்புதல் அளித்து, தமிழ்நாட்டு மாணவர்களின் நலன் காத்திட வேண்டும்” - என்று சென்னை விமான நிலையத்தில் இந்திய குடியரசுத் தலைவர் திருமதி. திரவுபதி முர்மு அவர்களை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேரில் சந்தித்து வலியுறுத்தினார்.**

சென்னை, இந்திய கடல்சார் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் கலந்துகொண்டு, டெல்லி புறப்பட்டுச் செல்லும் இந்தியக் குடியரசுத் தலைவர் திருமதி திரவுபதி முர்மு அவர்களை, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை விமான நிலையத்தில் நேற்று முன்தினம் (27.10.2023) சந்தித்தார். அப்போது, இந்தியக் குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காக ஓராண்டுக்கும் மேலாக நிலுவையில் உள்ள, தமிழ்நாடு இளங்கலை மருத்துவப் பட்டப்படிப்பு மாணவர் சேர்க்கை சட்டமுன்வடிவு 2021க்கு விரைந்து ஒப்புதல் அளிக்க வேண்டுமென நேரில் வலியுறுத்திய முதலமைச்சர் அவர்கள், இதுதொடர்பாக இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களுக்கு, நேற்று முன்தினம் (27.10.2023) தான் எழுதியுள்ள கடிதத்தையும் வழங்கினார்.

**பிற்படுத்தப்பட்டவர்களுக்கு நீட் தேர்வு எதிரானது!**

அக்கடிதத்தில், தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வு (NEET) அடிப்படையிலான மாணவர் சேர்க்கை, ஏழை மற்றும் பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கு எதிரானது என்பதைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாட்டில் ப்ளஸ் 2 மதிப்பெண்கள் மூலம் மருத்துவப் படிப்புகளுக்கான மாணவர் சேர்க்கை நடைபெற்றதாகவும், இந்தச் செயல்முறை கடந்த காலங்களில் மாநிலத்தில் நல்ல பலன்களை அளித்ததாகவும் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், ஒன்றிய அரசு நீட் தேர்வை அறிமுகப்படுத்தியதாலும், அதைத் தொடர்ந்து ஒன்றிய சட்டங்களில் செய்யப்பட்ட பல்வேறு மாற்றங்கள் காரணமாகவும், ப்ளஸ் 2 மதிப்பெண்கள் மூலம் நடைபெற்ற சேர்க்கை முறை நிறுத்தப்பட வேண்டிய நிலை ஏற்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளார்.

> **“ஒன்றிய சுகாதார மற்றும் குடும்ப நல அமைச்சகத்தின் சமீபத்திய கேள்விகளுக்கும் தமிழ்நாடு அரசின் சார்பில் பதிலளிக்கப்பட்டுள்ளதாகவும், ஆனால் துரதிர்ஷ்டவசமாக, இதுவரை இந்தச் சட்டமுன்வடிவிற்கு ஒப்புதல் வழங்கப்படாத நிலை உள்ளது.”**

நீட் தேர்வினால் ஏற்படும் பாதிப்புகளை ஆராய்ந்து, மாற்றுவழிகளை செயல்படுத்துவதற்குத் தேவையான பரிந்துரைகளை அரசுக்கு வழங்கிட நியமிக்கப்பட்ட நீதியரசர் ஏ.கே.இராஜன் அவர்கள் தலைமையிலான குழு அளித்த பரிந்துரைகளின் அடிப்படையிலும், பல்வேறு விவாதங்கள் நடத்தப்பட்டும், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 13.9.2021 அன்று ‘தமிழ்நாடு இளநிலை மருத்துவப் பட்டப் படிப்புகளுக்கான மாணவர் சேர்க்கை சட்டமுன்வடிவு, 2021’ (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 43/2021) நிறைவேற்றப்பட்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்களுக்கு 18.9.2021 அன்று அனுப்பப்பட்டதாகத் தெரிவித்துள்ள தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், ஆளுநர் அவர்கள் ஐந்து மாத காலத்திற்குப் பிறகு, மேற்படி சட்டமுன்வடிவினை மறுபரிசீலனை செய்யுமாறு தமிழ்நாடு அரசுக்குத் திருப்பியனுப்பிய நிலையில், 8.2.2022 அன்று தமிழ்நாடு சட்டமன்றத்தில் மீண்டும் இந்தச் சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட்டு, குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெறவேண்டி ஆளுநருக்கு அனுப்பி வைக்கப்பட்டதாக தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

**ஒன்றிய அமைச்சகத்துக்கு உரிய முறையில் விளக்கம்!**

பின்னர், மேற்படி சட்டமுன்வடிவு தமிழ்நாடு ஆளுநர் அவர்களால் ஒன்றிய உள்துறை அமைச்சகத்திற்கு அனுப்பப்பட்டு, ஒப்புதலுக்காக நிலுவையில் உள்ளதாகத் தெரிவித்துள்ள முதலமைச்சர் அவர்கள், இந்தச் சட்டமுன்வடிவு தொடர்பாக ஒன்றிய சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம், ஒன்றிய உயர்கல்வித் துறை, ஒன்றிய சுற்றுச்சூழல் அமைச்சகம் மற்றும் ஆயுஷ் அமைச்சகம் கோரிய அனைத்து விளக்கங்களும், ஒன்றிய உள்துறை அமைச்சகத்திற்கு உரிய காலத்திற்குள் வழங்கப்பட்டுள்ளதாக தேதிவாரியாகக் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்நாடு அரசின் சார்பில் போதிய விளக்கங்கள் அளிக்கப்பட்ட பிறகும் இந்த விஷயத்தில் எந்தவித முன்னேற்றமும் ஏற்படாததால், இந்தியக் குடியரசுத் தலைவருக்கு, 14.8.2023 அன்று தான் கடிதம் எழுதியிருந்ததாகவும்,

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

## 5 மாநில தேர்தல் முடிவுகள் மூலம்

# ஒன்றிய பா.ஜ.க. ஆட்சி முடிவுக்கு வரும்!

## திருமண விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!

**சென்னை, அக்.29-**

**சென்னை - இராணி மெய்யம்மை அரங்கில், நேற்று முன்தினம் காலை, கழக வழக்கறிஞர் ஏ.என்.புருஷோத்தம் புதல்வியும் - 84வது வார்டு மாமன்ற உறுப்பினருமான டாக்டர் ஏ.பி. பூர்ணிமா - கே.ஏ.இராதா கிருஷ்ணன் ஆகியோரின் திருமணத்தைத் தலைமையேற்று நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்தி உரையாற்றிய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், “விரைவில் நடைபெறவுள்ள 5 மாநில சட்டப்பேரவைத் தேர்தல் முடிவுகள் மூலம், ஒன்றிய பா.ஜ.க. ஆட்சி முடிவுக்கு வரும்!” என்று குறிப்பிட்டார்.**

சென்னையில் நேற்று முன்தினம் (27.10.2023) நடைபெற்ற வழக்கறிஞர் ஏ.என்.புருஷோத்தம் அவர்களின் இல்லத் திருமண விழாவில் ஆற்றிய உரை வருமாறு:-

இந்த மணவிழா நிகழ்ச்சிக்குத் தலைமைப் பொறுப்பை ஏற்று மணவிழாவை நடத்திவைத்து, அதே நேரத்தில் மணமக்களை வாழ்த்தக்கூடிய ஒரு சிறப்பான வாய்ப்பினைப் பெற்றமைக்கு நான் மகிழ்ச்சியடைகிறேன், பெருமைப்படுகிறேன்.

இன்று நடைபெற்றிருக்கக்கூடிய இந்த திருமணம், சீர்திருத்தத் திருமணமாக, சுயமரியாதை உணர்வோடு நடைபெற்றிருக்கக்கூடிய திருமணமாக நடந்தேறியிருக்கிறது. இது போன்ற சீர்திருத்தத் திருமணங்கள் நடைபெறுகிற நேரத்தில், அதிலும் குறிப்பாக நாம் வாழ்த்துகிற நேரத்தில் ஒன்றை தவறாமல், மறக்காமல், வழக்கமாக, வாடிக்கையாக வரலாற்றில் பதிவாகியிருக்கக்கூடிய ஒரு செய்தியை நான் தொடர்ந்து சொல்லிக் கொண்டு வருகிறேன். என்ன அந்த செய்தி என்று கேட்டால், இதுபோன்ற சீர்திருத்தத் திருமணங்கள் 1967க்கு முன்பு நடைபெறும் என்று சொன்னால், அந்தத் திருமணங்கள் சட்டப்படி செல்லுபடியாகும் என்ற அங்கீகாரத்தை நாம் பெற்றிருக்கவில்லை. சட்டம் அதற்கு இடம் கொடுக்கவில்லை.

**சுயமரியாதைத் தமிழ் திருமணம்!**

அந்த நிலையை மாற்றிட வேண்டும் என்பதற்காகத்தான் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் 1967இல் ஆட்சிப் பொறுப்பேற்று ஆட்சியின் தலைவனாக தமிழக முதல்வராக சட்டமன்றத்திற்கு உள்ளே முதன் முதலாக நுழைந்து, சீர்திருத்தத் திருமணங்கள் அனைத்தும் சட்டப்படி செல்லுபடியாகும் என்ற அங்கீகாரத்தை அன்றைக்கு அண்ணா அவர்கள் பெற்றுத்தந்தார். ஆகவே, இன்றைக்கு நடைபெற்றிருக்கக்கூடிய இந்தத் திருமணம் சட்டப்படி, முறைப்படி செல்லுபடியாகும் என்ற அங்கீகாரத்தோடு நடந்தேறியிருக்கிறது. இது சீர்திருத்தத் திருமணம் மட்டுமல்ல, சுயமரியாதை உணர்வோடு நடைபெறக்கூடிய திருமணம் மட்டுமல்ல, ஒரு தமிழ் திருமணம். இன்னும் பெருமையோடு சொல்லவேண்டும் என்று சொன்னால், நம்முடைய தாய்மொழியாம் தமிழ் மொழிக்கு செம்மொழி என்னும் அங்கீகாரத்தைப் பெற்றுத் தந்த தலைவர் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள். எனவே அந்த அங்கீகாரத் தோடு இது ஒரு தமிழ்த் திருமணமாக நடந்தேறியிருக்கிறது. அது எல்லோருக்கும் மகிழ்ச்சி. அப்படிப்பட்ட இந்தத் திருமணத்தில் நாம் எல்லாம் கலந்து கொண்டு மகிழ்ச்சியோடு மணமக்களைத் தமிழ் உணர்வோடு வாழ்த்திக் கொண்டிருக்கிறோம்.

**புருசோத்தமின் இயக்கப் பணிகள்!**

நம்முடைய கழக வழக்கறிஞரான அருமைச் சகோதரர் புருஷோத்தம் அவர்கள் அவரைப் பற்றிப் பேசும் போது இங்கே குறிப்பிட்டுச் சொன்னார்கள். புருஷோத்தம் அவர்கள் தன்னை இந்த இயக்கத்தோடு இணைத்துக் கொண்டு இயக்கப் பணிகளை எப்படியெல்லாம் ஆற்றிக்கொண்டிருக்கிறார் என்பதை அவரை அறிந்தவர்கள், அவரைப் புரிந்தவர்கள் குறிப்பாக இந்த மாவட்டத்தைச் சார்ந்தவர்கள் மிகத் தெளிவாக உணர்வார்கள், அறிவார்கள்.

1981-ஆம் ஆண்டு மாணவர் அமைப்பை ஏற்படுத்தி, அந்த மாணவர்களை எல்லாம் வைத்து பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தி, அப்படி நடத்திய நிகழ்ச்சிக்குத் தலைவர் கலைஞர் அவர்களை அழைத்து வந்து, அதைத் தலைவர் கலைஞர் பார்த்து மகிழ்ச்சி அடையக்கூடிய அளவுக்கு நடத்திக் காட்டியவர் நம்முடைய அருமைச் சகோதரர் புருஷோத்தம் அவர்கள்.

1991-இல் இருந்து உயர் நீதிமன்றத்தில் அவர் வழக்கறிஞராகப் பொறுப்பேற்றார். அப்படி பொறுப்பேற்றிருந்த நேரத்தில்தான் வரலாற்றில் யாரும் மறந்திடாத ஒரு கொடுமையான செய்தி. என்ன செய்தி என்று கேட்டால், அப்போது தமிழ்நாட்டில் ஜெயலலிதா அவர்கள் தலைமையில் அ.தி.மு.க. ஆட்சி. இன்றைக்கு சென்னை மாநகரத்தில் நீங்கள் பார்க்கிறீர்கள். நான் சென்னை மாநகரத்தின் மேயராக இருந்தபோது, 10 மேம்பாலங்கள் கட்டினோம். இதுவரைக்கும் சென்னையைப் பொறுத்தவரைக்கும் மட்டுமல்ல, இந்தியாவில் இருக்கக்கூடிய எந்த மாநகரமாக இருந்தாலும், மேம்பாலங்கள் கட்டுவது என்பது மாநகராட்சியின் வேலையல்ல. அது பொதுப்பணித் துறைதான் கட்ட வேண்டும். ஒன்றிய அரசாங்கம், மாநில அரசாங்கங்கள் தான் கட்ட வேண்டும். நெடுஞ்சாலைத் துறையின் சார்பில் கட்டுவார்கள். மாநகராட்சி கட்டிய வரலாறே கிடையாது.

ஆனால் 1996-லிருந்து 2001 வரைக்கும், அதற்குப் பிறகு 2006-இல் இருந்து தொடர்ந்து நான் இந்த மாநகரத்தின் மேயராக இருந்த போது 10 மேம்பாலங்களைப் போக்குவரத்தின் நெரிசலின் அடிப்படையில் கட்டவேண்டும் என்று முடிவு செய்து அதற்கான பணிகளில் ஈடுபட்டோம். வேகப்படுத்தினோம், விரைவுபடுத்தினோம். அந்தப் பாலங்களைக் கட்டுவதற்கு ஒரு குறிப்பிட்ட காலம் நிர்ணயிக்கப் பட்டு, அந்தக் காலத்திற்குள் 10 பாலங்களையும் கட்டி முடிக்க வேண்டும் என்று முடிவெடுத்தோம். ஆனால் 10 பாலங்களில்

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
ஞாயிற்றுக்கிழமை 29-10-2023

# தி.மு.க.வும் விடுதலைப் போராட்ட வீரர்களும் 2

இன்றைக்கு தமிழ்நாட்டில் பார்க்கும் சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கான மணிமண்டபங்கள் - சிலைகள், பெரும்பாலும் தி.மு.க. ஆட்சியில் உருவாக்கப்பட்டவை.

- ★ **பாஞ்சாலங்குறிச்சியில் கட்டபொம்மனுக்கு கோட்டை!**
- ★ **பாரதியின் இல்லம் அரசு இல்லம் ஆனது!**
- ★ **பெருந்தலைவர் காமராசர் மணிமண்டபம்!**
- ★ **மூதறிஞர் இராஜாஜி நினைவாலயம்!**
- ★ **தில்லையாடி வள்ளியம்மை மணிமண்டபம்!**
- ★ **வீரவாஞ்சியின் உறவினருக்கு நிதி!**
- ★ **வ.உ.சி. இழுத்த செக்கு நினைவுச் சின்னம் ஆனது!**
- ★ **விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு இலவச பேருந்துப் பயணம்!**
- ★ **தியாகிகள் மணிமண்டபம்**
- ★ **சுதந்திரப் பொன்விழா நினைவுச் சின்னம்!**
- ★ **பூலித்தேவன் நினைவு மண்டபம்!**
- ★ **தியாகி விஸ்வநாத தாஸ் வாழ்ந்த இல்லம் புதுப்பிப்பு!**
- ★ **மாவீரன் சுந்தரலிங்கம் வாரிசுகளுக்கு வீடு!**
- ★ **நேதாஜிக்கு சிலை!**
- ★ **கக்கனுக்கு சிலை!**
- ★ **சிப்பாய் கலகத்துக்கு நினைவுத்தூண்!**

இப்படி நாட்டுக்காக உழைத்த தியாகிகளைப் போற்றிய இயக்கம்தான் திராவிட முன்னேற்றக் கழகம்.

இந்த வரிசையில் இன்றைய திராவிட மாடல் ஆட்சியின் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களும் விடுதலைப் போராட்ட வீரர்களைப் போற்றி வருகிறார்.

★ சுதந்திர தினத்தின் 75 ஆவது ஆண்டு பெருவிழாவைக் கொண்டாடும் வகையில் ஏராளமான விழாக்கள் நாடு முழுவதும் நடத்தப்பட்டுள்ளன.

★ செக்கிழுத்த செம்மல் - கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனாரைப் பெருமைப்படுத்தும் வகையில் 13 அறிவிப்புகளை வெளியிட்டார். வ.உ.சி. நூற்றாண்டு மலர் 'தமிழரசு' சார்பில் வெளியிடப்பட்டது. வ.உ.சி.யின் நூல்களை தமிழ்நாடு பாடநூல் நிறுவனம் வெளியிட்டுள்ளது. தூத்துக்குடி பெரிய கார்டன் சாலை, வ.உ.சி. சாலை என மாற்றப்பட்டது. ஒட்டப்பிடாரம், நெல்லை மண்டபங்கள் மறுசீரமைப்பு செய்யப்பட்டுள்ளன. வ.உ.சி. மறைந்த நவம்பர் 18 தியாகத் திருவுருவ நாளாக அறிவிக்கப்பட்டுள்ளது.

★ மகாகவி பாரதியார் மறைந்த நூறாண்டின் நினைவை முன்னிட்டு 14 அறிவிப்பினைச் செய்தார். கடந்த ஆண்டு முழுவதும் பாரதி விழா நடத்தப்பட்டுள்ளது. பாரதியார் பிறந்த நாளை 'மகாகவி நாள்' என அறிவித்தோம். மாநில அளவில் கவிதைப் போட்டிகள் நடத்தப்பட்டன. 'பாரதி இளம் கவிஞர்' விருது வழங்கப்பட்டது. பாரதி ஆய்வாளர்களுக்கு விருதும், பரிசுத் தொகையும் வழங்கப்பட்டன. பாரதியார் இல்லத்தில் வாரம் தோறும் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. மகளிர் சுய உதவிக் குழுக்களின் வாழ்வாதாரப் பூங்காவுக்கு பாரதியார் பெயர் சூட்டப்பட்டது. பாரதி நினைவு நூற்றாண்டு மலர் 'தமிழரசு' சார்பில் வெளியிடப்பட்டது.

★ உத்திரப்பிரதேச மாநிலம் காசியில் பாரதியார் வாழ்ந்த வீட்டைப் பராமரிக்கவும் புதுப்பிக்கவும் அரசு சார்பில் 18 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுப் பணிகள் முடிந்து ஒப்படைக்கப்பட்டது.

★ கிண்டி காந்தி மண்டபத்தில் வீரபாண்டிய கட்டபொம்மன் திருவுருவச் சிலையும், மருது சகோதரர்கள் சிலையும் அமைக்கப்பட்டுள்ளன.

★ கடலூர் அஞ்சலை அம்மாள் சிலை வைக்கப்பட்டுள்ளது.

★ விடுதலைப் போராட்ட வீரர்களின் நினைவிடங்களில் ஒலி, ஒளி காட்சிகள் அமைத்திட நடவடிக்கை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

★ காந்தி மண்டபம், அருங்காட்சியகம், பெருந்தலைவர் காமராசர் மண்டபம், பெரியவர் பக்தவத்சலம் மண்டபம் ஆகியவற்றை மேம்படுத்த 3. 36 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

★ சுதந்திரப் போராட்ட வீரர் தளி பாளையக்காரர் மலையாண்டி வெங்கிடுபதி எத்தலப்பர் அவர்களுக்கு திருப்பூர் மாவட்டத்தில் நினைவு மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது.

★ தனது வாழ்நாளில் 20 முறை தமிழகம் வந்தவர் அண்ணல் காந்தியடிகள் அவர்கள். அரையாடை அணிவது என்ற முடிவை மதுரை மண்ணில் இருந்து தான் காந்தியடிகள் எடுத்தார்கள். இதன் அடையாளமாக சென்னை அருங்காட்சியக வளாகத்தில் காந்தியடிகளின் நினைவுச் சிலையை அமைத்து, அதனை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

★ இந்திய சுதந்திரப் போராட்ட வீரர்கள் 195 பேருக்கு மாதம்தோறும் தியாகிகளுக்கான நிதிக் கொடையை தொடர்ந்து வழங்கி வருகிறது, தமிழ்நாடு அரசு.

★ விடுதலைப்போராட்டத்தின் பவள விழாவை ஒட்டி, கடந்த ஆண்டு தியாகிகளுக்கான ஓய்வூதியம் ரூபாய் 18 ஆயிரத்தில் இருந்து 20 ஆயிரமாகவும், குடும்ப ஓய்வூதியம் ரூபாய் 9 ஆயிரத்திலிருந்து 10 ஆயிரம் ரூபாயாகவும் உயர்த்தியுள்ளது.

★ அதுபோல் விடுதலைப் போராட்ட வீரர்களின் வழித் தோன்றல்களுக்கு தொடர்ந்து உதவிகளைச் செய்து வருகிறது நம் அரசு.

★ விடுதலைப் போராட்டத் தியாகிகளுக்கும், அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கும் தற்பொழுது வழங்கப்பட்டு வரும் மாதாந்திர ஓய்வூதியம் பத்தாயிரம் ரூபாயிலிருந்து, 11 ஆயிரம் ரூபாயாக இனி உயர்த்தி வழங்கப்படும் என்ற புதிய அறிவிப்பை கடந்த ஆகஸ்ட் 15 அன்று மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்தார்கள். இவை எதையும் தெரிந்துகொள்ளாமல் பொத்தாம் பொதுவாக, விடுதலைப் போராட்ட வீரர்களை மறைத்து விட்டார்கள் என்று சொல்வது அறியாமை ஆகும்.

**1967 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் தி.மு.க. ஆட்சி அமைந்தது. 1967க்கு முன்னதாக தமிழ்நாட்டில் சுதந்திரப் போராட்ட வீரர்களுக்காக இருந்த நினைவு மண்டபம் என்பவை மூன்று.**

**சென்னை காந்தி மண்டபம் 27.1.1956 அன்று அமைக்கப்பட்டது. கன்னியாகுமரியில் காந்தி நினைவு மண்டபமானது 30.5.1956 அன்று அமைக்கப்பட்டது. ஒட்டப்பிடாரத்தில் வ.உ.சி. அவர்களது இல்லம் நினைவு இல்லமாக மாறிய நாள் 7.8.1957 ஆகும். இவை மூன்றுதான் இருந்தன.**

**1967 ஆம் ஆண்டு கழக ஆட்சி அமைந்ததற்குப் பிறகுதான் அனைத்துத் தியாகிகளுக்கும் ஆண்டுதோறும் நினைவுச் சின்னங்கள் அமைக்கப்பட்டன. அ.தி.மு.க. ஆட்சியிலும் தியாகிகள் போற்றப்பட்டார்கள் என்றாலும், அதிகமான நினைவுச் சின்னங்களை எழுப்பியவர் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள்தான்.**

பாரதி வாழ்ந்த எட்டையபுரம் வீட்டை அரசு இல்லமாக தி.மு.க. அரசு ஆக்கி ஐம்பது ஆண்டுகள் (12.5.1973) ஆகிவிட்டன. மொத்த தியாகிகளுக்கும் சேர்த்து தியாகிகள் மணிமண்டபத்தைக் கட்டியவர் கலைஞர். தில்லையாடி வள்ளியம்மைக்கு நினைவகம் அமைத்த நாள் 13.8.1971.

சுதந்திர தினப் பொன்விழா நினைவுத் தூணை 1997 ஆம் ஆண்டும், குடியரசு பொன்விழா நினைவுத்தூணை 2001 ஆம் ஆண்டும், சிப்பாய் புரட்சி நினைவுத் தூணை வேலூரில் 1998 ஆம் ஆண்டும் திறந்து வைத்தவர் முதலமைச்சர் கலைஞர்.

**கிண்டி ஆளுநர் மாளிகையில் உட்கார்ந்து கொண்டு 'துக்ளக்' அரைகுறை வாசகர்கள் சொல்வதைக் கேட்டுப் பேசி வரும் ஆளுநர் ஆர்.என்.ரவி, தனக்குத் தரப்பட்ட வேலைகளை ஒழுங்காக முதலில் பார்க்கவும்.**

●●



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (27.10.2023) சென்னையில் நடைபெற்ற வழக்கறிஞர் ஏ.என். புருஷோத்தம் அவர்களின் மகளும், 87வது வார்டு மாமன்ற உறுப்பினருமான டாக்டர் ஏ.பி.பூர்ணிமா – கே.ஏ.இராதாகிருஷ்ணன் ஆகியோரது திருமணத்தை தலைமையேற்று நடத்தி வைத்து, மணமக்களை வாழ்த்தினார். உடன் இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் ஜோசப் சாமுவேல், இ.பரந்தாமன், ப.தாயகம் கவி, மூத்த வழக்கறிஞர் விடுதலை, துணை மேயர் மு.மகேஷ் குமார், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் டி.கே.எஸ். இளங்கோவன், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப.ரங்கநாதன் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.

### தமிழ்நாட்டில் மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழ்

# தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டிய ரூ.2,697 கோடியை உடனே விடுவிப்பீர்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் - ஒன்றிய அமைச்சருக்கு கடிதம்!

**சென்னை, அக்.29-**

**தமிழ்நாட்டில், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின்கீழ், தொழிலாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய ஊதியத்திற்கான ரூ.2,697 கோடியினை உடனடியாக விடுவிக்கக்கோரி, ஒன்றிய ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் அமைச்சர் கிரிராஜ் சிங் அவர்களுக்கு, முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.**

தமிழ்நாட்டில், எதிர்வரும் பண்டிகைக் காலத்தைக் கருத்தில் கொண்டு, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ், தொழிலாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய நிலுவைத் தொகையினை உடனடியாக விடுவிக்க வலியுறுத்தி ஒன்றிய ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் அமைச்சர் கிரிராஜ் சிங் அவர்களுக்கு, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 26.10.2023 அன்று கடிதம் எழுதியுள்ளார்.

முதலமைச்சர் அவர்கள் எழுதியுள்ள கடிதத்தில், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் என்பது, கிராமப்புறங்களில் பதிவு செய்யப்பட்ட அனைத்துக் குடும்பங்களுக்கும் வேலைவாய்ப்பை வழங்குவதற்கான முக்கியமான திட்டங்களில் ஒன்று என்பதையும், இந்தத் திட்டம் கிராமப்புற மக்களுக்கு வாழ்வாதார வாய்ப்பை வழங்குவதோடு, கிராமப்புறங்களில் உள்கட்டமைப்பை மேம்படுத்திட ஏதுவான நீடித்த மற்றும் நிலையான கிராமப்புற சொத்துகளை உருவாக்கிடும் மற்றும் கிராமப்புற மக்களின் தேவைகளைப் பெருமளவில் பூர்த்தி செய்திடும் ஒரே திட்டமாகும் என்பதைச் சுட்டிக்காட்டி யுள்ளார்.

**தமிழ்நாடு எப்போதும் சிறந்த மாநிலமாகத் திகழும்!**

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தினைச் செயல்படுத்துவதில், பல்வேறு அளவுகோல்களின்கீழ் தமிழ்நாடு எப்போதும் சிறந்த மாநிலமாகத் திகழ்வதாகப் பெருமிதத்துடன் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டில் 92.86 இலட்சம் குடும்பங்களுக்கு பணி அட்டை வழங்கப்பட்டுள்ளதாகவும், இதில், 76.15 இலட்சம் குடும்பங்களைச் சேர்ந்த 91.52 இலட்சம் தொழிலாளர்கள் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டப் பணிகளில் தொடர்ந்து ஈடுபட்டு வருவதாகவும் புள்ளிவிவரங்களுடன் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்நாட்டின் விவசாயம், தென்மேற்குப் பருவமழை மற்றும் வடகிழக்குப் பருவமழையையே பெரிதும் நம்பியிருக்கும் நிலையில், இவற்றில் மாறுபாடுகள் ஏற்படும் சூழலில், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டப் பணிகளுக்கு அதிகத் தேவை ஏற்படுவதாகவும் முதலமைச்சர் அவர்கள் தனது கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம், கிராமப்புறங்களில் உள்ள முதியோர்கள், ஆதரவற்ற பெண்கள், குடும்பத் தலைவிகள், மாற்றுத் திறனாளிகள் போன்றோருக்கு முக்கியமானதொரு வாழ்வாதாரமாகவும், குறிப்பாக விவசாயம் நலிவடைந்த பருவத்தில், கிராமப்புறங்களில் உள்ள பலருக்கு கூடுதல் வாழ்வாதார வாய்ப்பாகவும் கருதப்படுகிறது என்று தெரிவித்துள்ள முதலமைச்சர் அவர்கள், இந்தத் திட்டத்தில் பெரும்பான்மையான தொழிலாளர்கள் பெண்களாக இருப்பதாலும், அவர்களின் வங்கிக் கணக்கில் ஊதியம் வரவு வைக்கப்படுவதாலும், அவர்களின் நிதிநிலை மற்றும் வாழ்வாதாரம் பெரிதும் மேம்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டியுள்ளார்.

**31.15 கோடி மனித நாட்களை தமிழ்நாடு எட்டியுள்ளது!**

தமிழ்நாட்டில், 2023-2024 ஆம் ஆண்டில் 40 கோடி மனித நாட்கள் தேவைப்படும் நிலையில், இதுவரை, 28 கோடி மனித நாட்களுக்கு ஒன்றிய அரசு ஒப்புதல் அளித்துள்ளதாகவும், 23.10.2023 வரை, 66.26 இலட்சம் குடும்பங்களைச் சேர்ந்த 76.06 இலட்சம் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பை வழங்கியதன் மூலம், தமிழ்நாடு 31.15 கோடி மனித நாட்களை எட்டியுள்ளதாகவும் தனது கடிதத்தில் முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

2023-2024 நிதியாண்டில், 19.7.2023 வரை, தொழிலாளர்களுக்கு திறன்சாரா ஊதியத்திற்காக ரூ.4,903.25 கோடியை ஒன்றிய அரசு விடுவித்துள்ளதாகவும், அதனைத் தொடர்ந்து 25.9.2023 அன்று 1,755.43 கோடி ரூபாய், திறன்சாரா ஊதியம் வழங்குவதற்காக ஒன்றிய அரசால் ஒப்பளிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ள முதலமைச்சர் அவர்கள், எனினும் அனுமதிக்கப்பட்ட தொகையில் ரூ.418.23 கோடி மட்டுமே விடுவிக்கப்பட்டுள்ளதாகவும், மீதமுள்ள ரூ.1,337.20 கோடி, தொழிலாளர்களின் கணக்கில் வரவு வைக்கப்படவில்லை என்று தெரிய வந்துள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதோடு, அதற்குப்பிறகான வாரங்களுக்கான ஊதியத்திற்கான ரூ.1,359.57 கோடி நிலுவைத் தொகையும் இன்னும் வழங்கப்படவில்லை என்றும், 20.10.2023 நிலவரப்படி, தமிழ்நாட்டில் தொழிலாளர்களின் ஊதிய நிலுவை ரூ.2,696.77 கோடி என்றும் முதலமைச்சர் அவர்கள் தனது கடிதத்தில் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

"கள ஆய்வில் முதலமைச்சர்" திட்டத்தின் ஒரு பகுதியாக, கடந்த 17.10.2023 அன்று, செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள காட்டாங்குளத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு தான் ஆய்வுப் பயணம் மேற்கொண்டபோது, வரவிருக்கும் பண்டிகைக் காலத்தைக் கருத்தில் கொண்டு, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ், தொழிலாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய ஊதியத்தை உடனடியாக வழங்கிட வேண்டுமென்று பொது மக்களும், மக்கள் பிரதிநிதிகளும் தம்மிடம் கோரிக்கை விடுத்ததாகவும், இதேபோன்ற கோரிக்கை திருவண்ணாமலை மாவட்ட ஆய்வுப் பயணத்தின் போதும் தமக்கு வந்ததாகவும் தனது கடிதத்தில் முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, மேற்குறிப்பிட்ட காரணங்களை கருத்தில் கொண்டு, தமிழ்நாட்டில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ், தொழிலாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய ரூ.2,696.77 கோடி மொத்த ஊதிய நிலுவைக்கான தொகையினை உடனடியாக விடுவிக்க வேண்டுமென்று ஒன்றிய அரசைக் கேட்டுக் கொண்டுள்ளதோடு, திறன்சாரா தொழிலாளர்களுக்குத் தொடர்ந்து கூடுதல் நிதி விடுவிக்கப்பட வேண்டுமென்றும் தனது கடிதத்தில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வலியுறுத்தியுள்ளார்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் முன்னிலையில்

# ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. இல்லத் திருமண விழா!

## கழகப் பொதுச்செயலாளர் அமைச்சர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., அமைச்சர் கே.என்.நேரு, ஆர்.எஸ். பாரதி - முன்னணியினர் வாழ்த்து!

*சென்னை, அக்.29-*

*சென்னை, அம்பத்தூர் நினைவில் வாழும் ஆ.ஆதிசிவம்- நாகபூஷணம் ஆகியோரின் மகன் வழி பேத்தியும், ஆவடி, பட்டாபிராம் நினைவில் வாழும் வி.மாசிலாமணி - விசாலாட்சி ஆகியோரின் மகள் வழி பேத்தியும் தி.மு.கழக ஆதி திராவிடர் நலக்குழுவின் மாநிலச் செயலாளரும், பூவிருந்த வல்லி தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான ஆ.கிருஷ்ணசாமி - திருமதி. மாலதி கிருஷ்ணசாமி ஆகியோரின் புதல்வியுமான டாக்டர் ஏ.கே.எஸ்.தாரணி - அரியலூர் மாவட்டம் ஆண்டிமடம் சு.ப. முருகன் - மஞ்சுளா ஆகியோரின் புதல்வர் டாக்டர் எம். பரத் கௌசிக் ஆகியோரது மணவிழா 1.11.2023 புதன் காலை 9.30 மணியளவில், திருவான்மியூர் ஸ்ரீஇராமச்சந்திரா கன்வென்ஷன் சென்டரில் நடைபெறுகிறது.*

*இந்த மணவிழாவினை கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையேற்று நடத்தி வைக்கிறார்.*

*கழக இளைஞர் அணிச் செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் முன்னிலை வகிக்கிறார்.*

*கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி, திருவள்ளூர் மத்திய மாவட்டச் செயலாளர் சா.மு.நாசர் எம்.எல்.ஏ., தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன், ஆதி திராவிடர் நலக்குழு தலைவர் க.சுந்தரம், சென்னை வட கிழக்கு மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ., திருவள்ளூர் கிழக்கு மாவட்டச் செயலாளர் டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ., திருவள்ளூர் மேற்கு மாவட்டச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ., கழக சொத்துப் பாதுகாப்புக்குழு உறுப்பினர் இ.ஏ.பி. சிவாஜி, தலைமை செயற்குழு உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன் எம்.எல்.ஏ. ஆகியோர் வரவேற்புரையாற்றுகின்றனர்.*

*கழக பொதுச்செயலாளர், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., கழக முதன்மைச் செயலாளர், அமைச்சர் கே.என். நேரு, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி,*

*கழக துணைப் பொதுச் செயலாளர்கள் அமைச்சர் ஐ.பெரியசாமி, அமைச்சர் எ.வ.வேலு, அமைச்சர் க.பொன்முடி, ஆ.இராசா எம்.பி., கனிமொழி கருணாநிதி எம்.பி., அந்தியூர் ப. செல்வராஜ் எம்.பி., மற்றும் மு.க.தமிழரசு, முரசொலி செல்வம், கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி., சிறு குறு (ம) நடுத்தர தொழில்துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன்,*

*தோழமைக் கட்சி தலைவர்கள் ஆசிரியர் கி.வீரமணி, தொல். திருமாவளவன் எம்.பி., கே.எம்.காதர் மொய்தீன், கு.செல்வபெருந்தகை எம்.எல்.ஏ., தி.வேல்முருகன் எம்.எல்.ஏ.*

*அமைச்சர்கள் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, மா.சுப்பிரமணியன், பி.கே. சேகர்பாபு, எஸ்.ரகுபதி, மா. மதிவேந்தன், எஸ்.எஸ்.சிவசங்கர், சு.முத்துசாமி, கே.ஆர். பெரியகருப்பன், மு.பெ. சாமிநாதன், பி.கீதாஜீவன், அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், ஆர்.எஸ்.ராஜ கண்ணப்பன், க.ராமச்சந்திரன், அர.சக்கர பாணி, பி.மூர்த்தி, பி.டி.ஆர்.பழனிவேல் தியாக ராஜன், கே.எஸ்.மஸ்தான், சி.வெ.கணேசன், அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சிவ.வீ.மெய்யநாதன், த.மனோ தங்கராஜ், டி.ஆர். பி.ராஜா, ந.கயல்விழி செல்வராஜ், மற்றும் கு.பிச்சாண்டி, கோவி.செழியன், சபாநாயகர் கே. அப்பாவு, கே.ஜெயகுமார் எம்.பி., காரம்பாக்கம் கணபதி எம்.எல்.ஏ., ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ., கே.பி.சங்கர் எம்.எல்.ஏ., துரை சந்திரசேகர் எம்.எல்.ஏ. உள்ளிட்ட பலர் பங்கேற்று மணமக்களை வாழ்த்துகின்றனர்.*

*ஆ.வில்வமணி நன்றியுரையாற்றுகிறார்.*

*மணவிழா வரவேற்பு 31.10.2023 செவ்வாய்க் கிழமை மாலை 6 மணிக்கு நடைபெறுகிறது.*



திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில், தமிழ்நாடு சட்டமன்ற பேரவைத் தலைவர் மு.அப்பாவு, நிதி மற்றும் மனித வள மேலாண்மைத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, பால் வளத்துறை அமைச்சர் த.மனோதங்கராஜ் ஆகியோர் முன்னிலையில் அனைத்துத்துறை அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் நேற்று முன்தினம் (27.10.2023) நடைபெற்றது. உடன் திருநெல்வேலி நாடாளுமன்ற உறுப்பினர் சா.ஞானதிரவியம், பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வகாப் , திருநெல்வேலி மாநகராட்சி மேயர் பி.எம்.சரவணன், சிறப்பு திட்ட செயலாக்கத்துறை செயலர் தாரேஸ் அகமது, மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர் கா.ப.கார்த்திகேயன், மாநகர காவல் ஆணையர் திருமதி.மகேஸ்வரி, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சிலம்பரசன், மாநகராட்சி துணை மேயர் கே.ஆர்.ராஜ்6, மாவட்ட ஊராட்சித் தலைவர் வி.எஸ்.ஆர்.ஜெகதீஷ் உட்பட பலர் உள்ளார்கள்.

# ஆளுநர் இங்கே தொடர்வது கழக ஆட்சிக்கு நல்லது!

## மணவிழாவில் முதல்வர் உரை!... முதல் பக்கத் தொடர்ச்சி

ஒரு பாலம் பெரம்பூரில் இருக்கக் கூடிய மேம்பாலம். அதில் சிறிது டெக்னிக்கல் பிரச்சினை இருந்தது. அதனால், விரைவாக குறித்த நேரத்தில் கட்டுவதற்கான வாய்ப்பு கிடைக்கவில்லை. அதனால் சிறிது தடைபட்டது. ஆனால் மீதம் இருக்கக்கூடிய ௯ மேம்பாலங்களைக் குறித்த காலத்தில் மட்டுமல்ல, குறித்த காலத்திற்கு முன்பே கட்டி முடித்த பெருமை நமக்குண்டு.

**பெரம்பூர் பாலம்!**

அதற்குப் பிறகு, ஆட்சி மாற்றம் வந்தது. ஆட்சி மாற்றம் வந்த காரணத்தினால், அந்தப் பெரம்பூர் பாலம் அப்படியே கிடப்பில் போடப்பட்டது. அதை ஏன் கிடப்பில் போட்டார்கள் என்ற விஷயத்தை நான் சொல்கிறேன். அது ஒரு பெரிய விஷயம். ஆனால் அதற்குப் பிறகு நாம் மீண்டும் ஆட்சிக்கு வருகிறோம். மீண்டும் ஆட்சிக்கு வந்த பிறகு, நாம் ஆட்சியிலிருந்தபோது அடிக்கல் நாட்டிப் பாதி பணியை முடித்து டெக்னிக்கல் பிரச்சனையால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த அந்தப் பாலம் அ.தி.மு.க. ஆட்சியில் கிடப்பில் போடப்பட்டு மீண்டும் நாம் ஆட்சிக்கு வந்த பிறகு நம்முடைய தலைவர்தான், எந்தத் தலைவர் அடிக்கல் நாட்டினாரோ அதே தலைவர் கலைஞர் அவர்கள் அந்தப் பாலத்தைத் திறந்து வைத்தார். இதுதான் ரெக்கார்டு. அதோடு இன்னொரு அதிசயம் என்ன என்று கேட்டால், அரசு சார்பிலோ அல்லது மாநகராட்சி சார்பிலோ ஏதாவது கட்டிடம் கட்டுகிறோம், பாலங்கள் கட்டுகிறோம், ரோடு போடுகிறோம், தெருவிளக்கு போடுகிறோம், கால்வாய் கட்டுகிறோம் இதுபோன்ற பணிகளைச் செய்கின்றபோது ஒரு காலத்தை நிர்ணயிப்போம். காலத்தை நிர்ணயிப்பது மட்டுமல்ல, ஒரு மதிப்பீடு போடுவோம், இந்த மதிப்பீட்டுக்குள் கட்டப் போகிறோம் என்று முடிவெடுப்போம். கடைசியில் கணக்கெடுத்துப் பார்த்தால், அந்த மதிப்பீடு போட்டதைவிடத் தாண்டிப் போயிருக்கும். ஏனென்றால் சில டெக்னிக்கல் பிரச்சினை வந்துவிடும், அதனால் காலதாமதமாகும். அப்போது விலைவாசி ஏற்றத்தின் அடிப்படையில், நாம் அதிகமாகச் செலவு செய்யக்கூடிய சூழ்நிலை வந்துவிடும். இது எதார்த்தமான நிலை.

ஆனால் சென்னை மாநகரத்தில் கட்டியபோது எவ்வளவு காலத்திற்குள் கட்டிவிடுவோம் என்று சொன்னோமோ, அந்த காலத்திற்குள் கட்டிமுடித்தோம் என்பது மட்டுமல்ல, எந்த மதிப்பீட்டில் கட்டிமுடிக்கவேண்டும் என்று சொன்னோமோ அதைவிடக் குறைவாக அந்தப் பாலத்தைக் கட்டிமுடித்தோம். அப்படிப்பட்ட சூழ்நிலையில் தான் இடையில் அதிமுக ஆட்சிக்கு வந்தது. அந்தப் பாலத்தில் ஊழல் நடந்திருக்கிறது என்று ஒரு வழக்கு போட்டார்கள். ஜெயலலிதா அவர்கள் ஆட்சில் அந்த வழக்கு போட்டார்கள்.

இரவோடு இரவாக, தலைவர் கலைஞரைக் கைது செய்த கொடுமையை எல்லாம் பார்த்திருப்பீர்கள். அதையெல்லாம் இங்கே சொல்ல விரும்பவில்லை. ஒரு நல்ல நிகழ்ச்சி நடந்து கொண்டிருக்கிறது. அந்த சோகமான நிகழ்ச்சியை எல்லாம் இங்கே எடுத்துக் கூற விரும்பவில்லை.

**புருசோத்தம் தொடுத்த பொதுநல வழக்கு!**

**கலைஞரைக் கைது செய்தபோது, அன்றைக்கு ஒரு பொதுநல வழக்காக நம்முடைய புருஷோத்தம் அவர்கள் தொடுத்தார். அந்த பொதுநல வழக்கை தொடுத்த காரணத்தினால்தான் அன்றைக்கு உயர்நீதிமன்ற நீதிபதி என்.கே. ஜெயின் அவர்கள் அதை விசாரித்து ஜெயலலிதா அவர்கள் ஆட்சியில் தலைவர் கலைஞர் அவர்கள் கைது செய்யப்பட்டதற்குக் கண்டனத்தைத் தெரிவித்து உடனடியாக விடுதலை செய்தார். இதுதான் புருசோத்தமனுக் கும், நம்முடைய இயக்கத்திற்கும், இயக்கத்தில் இருக்கக்கூடிய தலைவருக்கும் உள்ள வரலாறு என்பதை நான் பெருமையோடு இங்கே சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.**

**அவருடைய திறமை, அதற்குப் பிறகு படிப்படியாக மாநில அரசு வழக்கறிஞராக நியமனம் பெற்றார். ஒன்றிய அரசின் மூத்த குழு வழக்கறிஞராவும் இரண்டு முறை பணியாற்றக்கூடிய வாய்ப்பைப் பெற்றார்.**

**கழகத்தின் சார்பில் நடத்தக்கூடிய எந்தப் போராட்டமாக இருந்தாலும், அதில் வழக்கறிஞர்கள் பங்கேற்கிறார்கள் என்று சொன்னால், அதில் அவரும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார்.**

இன்றைக்கு, அவருடைய மகள், அப்பாவுக்குப் பிள்ளை தப்பாமல் பிறந்திருக்கிறான் என்று சொல்வார்கள், அப்பாவுக்குப் பொண்ணு தப்பாமல் பிறந்திருக்கிறார். மணமகளாக வீற்றிருக்கக்கூடிய பூர்ணிமா அவர்கள் மாநகராட்சி மன்ற உறுப்பினராகவும், மாநகராட்சி மன்ற உறுப்பினராக மட்டுமல்ல, சுகாதார நிலைக்குழு உறுப்பினராக பொறுப்பேற்று அந்த கடமையும் சிறப்பாக நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார். இதையெல்லாம் நினைத்துப் பார்க்கின்றபோது, இங்கே கூட சொன்னார்கள். நம்முடைய டி.கே.எஸ். இளங்கோவன் அவர்கள் பேசுகிறபோது, பெண்களுக்கு எந்தளவுக்கு உரிமை தருகிறோம், முதன்முதலாக ராஜீவ்காந்தி அவர்கள் 33 விழுக்காடு ஒதுக்கீட்டை பஞ்சாயத்து ராஜ் சட்டத்தின் அடிப்படையில் வழங்கவேண்டும் என்று சொன்னபோது எந்த மாநிலமும் நிறைவேற்றுவதற்கு முன்வர வில்லை, முதல் மாநிலம் தமிழ்நாடுதான் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, நான் சென்னையின் மேயராக இருந்தபோது. இதுதான் திராவிட மாடல்.

இன்றைக்கு பெரிய பெரிய பதவியில் உட்கார்ந்து கொண்டு, யார் யாரோ கேட்டுக் கொண்டிருக்கிறார்கள் அல்லவா? அந்த பதவி என்பதே வேஸ்ட். அதுவும் பெரிய பெரிய மாளிகையில் உட்கார்ந்து கொண்டு, திராவிடம் என்றால் என்ன? திராவிடம் என்றால் என்ன? இப்போது நடந்து கொண்டிருக்கிற கல்யாணம் இதுதான் திராவிடம். திராவிடம் என்றால் என்ன என்று கேட்க வைத்திருக்கிறதே, அது தான் திராவிடம். திராவிடம் என்றால் என்ன? என்று கேட்கிறாரே அவரே தொடர்ந்து இருக்க வேண்டும். அது இன்னும் நம்முடைய பிரச்சாரத்திற்கு வலு சேர்த்துக் கொண்டே இருக்கிறது.

**இன்றைக்கு பெரிய பெரிய பதவியில் உட்கார்ந்து கொண்டு, யார் யாரோ கேட்டுக் கொண்டிருக்கிறார்கள் அல்லவா? அந்த பதவி என்பதே வேஸ்ட். அதுவும் பெரிய பெரிய மாளிகையில் உட்கார்ந்து கொண்டு, 'திராவிடம் என்றால் என்ன? திராவிடம் என்றால் என்ன?' இப்போது நடந்து கொண்டிருக்கிற கல்யாணம் இதுதான் திராவிடம். திராவிடம் என்றால் என்ன என்று கேட்க வைத்திருக்கிறதே, அதுதான் திராவிடம். திராவிடம் என்றால் என்ன? என்று கேட்கிறாரே அவரே தொடர்ந்து இருக்க வேண்டும். அது இன்னும் நம்முடைய பிரச்சாரத்திற்கு வலு சேர்த்துக்கொண்டே இருக்கிறது.**

நான் இங்கே இருக்கக்கூடிய ஒன்றிய அரசில் இருக்கக்கூடிய பிரதமரை, உள்துறை அமைச்சராக இருக்கின்ற அமித் ஷா அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புவது, தயவுசெய்து இங்கே இருக்கக் கூடிய ஆளுநரை மட்டும் என்றைக்கும் மாற்றவேண்டாம். இந்த நாடாளுமன்றத் தேர்தல் வரைக்குமாவது இருக்கவேண்டும். அதில் எங்களுக்கு பல சௌகரியங்கள். எது வேண்டுமென்றாலும் பேசிக் கொண்டிருக்கிறார். ஆனால் இன்றைக்குப் பொதுமக்கள் யாரும் இதை பொருட்படுத்தவில்லை. இன்றைக்கு சமூக ஊடகங்களில் வந்து கொண்டிருக்கக்கூடிய செய்திகளை எல்லாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். எனவே, இந்தச் சூழ்நிலையில்தான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி பொறுப்பேற்று தேர்தல் நேரத்தில் என்னென்ன உறுதிமொழிகளை மக்களிடத்தில் எடுத்துச் சொல்லியிருக்கிறதோ, அந்த உறுதிமொழிகளை எல்லாம் சிறப்பாகத் தொடர்ந்து நிறைவேற்றிக் கொண்டிருக்கக்கூடிய இந்த காட்சிகளை எல்லாம் பார்க்கிறீர்கள்.

**பா.ஜ.க. ஆட்சிக்கு முற்றுப்புள்ளி!**

இன்றைக்குக் கருத்துக்கணிப்பு வரக்கூடிய சூழ்நிலை எல்லாம் பார்க்கிறபோது, எப்படி தமிழ்நாட்டில் ஒரு மிகப்பெரிய வெற்றியைக் கடந்த சட்டமன்ற, நாடாளுமன்றத் தேர்தலில் பெற்றோமோ, அதே போல் வட மாநிலத்தில் நடைபெற இருக்கக்கூடிய 5 மாநிலத்தின் சட்டமன்றத் தேர்தலில் நிச்சயமாக, உறுதியாக இந்தியா கூட்டணி மிகப்பெரிய வெற்றியைப் பெறக் கூடிய ஒரு சூழ்நிலை உருவாகி இருக்கிறது. மோடி அவர்கள் தலைமையில் ஆண்டு கொண்டிருக்கக் கூடிய ஒன்றிய பா.ஜ.க. ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்கக்கூடிய சூழ்நிலை உருவாகிக் கொண்டிருக்கிறது. 2024ல் நடைபெறவிருக்கக்கூடிய நாடாளுமன்ற தேர்தலுக்கு நீங்கள் எல்லாம் தயாராக இருக்க வேண்டும், தயாராக இருக்கவேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொண்டு, மணமக்களை பொறுத்தவரைக்கும் எப்போதும் கோரிக்கைகள் வைக்கமாட்டேன். அதிலும் நம்முடைய மணமகள் டாக்டர், மணமகன் ராதாகிருஷ்ணன், இன்ஜினியர், பி.இ. படித்திருக்கிறார். நாட்டில் இருக்கக்கூடிய நிலவரங்கள் அத்தனையும் அவர்களுக்கு நன்றாக புரியும்.

அதனால் அவர்களுக்கு அறிவுரைகள், ஆலோசனைகள் சொல்ல வேண்டிய அவசியமே இல்லை. இருந்தாலும், ஒரே ஒரு வேண்டுகோள், தமிழ்நாட்டில் இருக்கிறோம், தமிழர்களாக வாழ்கிறோம், தமிழுக்காகவே போராடுகிறோம், தமிழுக்காகவே வாழ்ந்து கொண்டிருக்கிறோம். எனவே, உங்களுக்குப் பிறக்கக்கூடிய குழந்தைகளுக்கு அழகான தமிழ்ப் பெயர்களை சூட்டுங்கள், சூட்டுங்கள் என்று அன்போடு கேட்டு, அன்போடு மட்டுமல்ல, உரிமையோடு கேட்டு விடைபெறுகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

# முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்!

**முதல் பக்கத் தொடர்ச்சி**

அதில், நீட் தேர்வினால் பின்தங்கிய வகுப்பைச் சார்ந்த மாணவர்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகள் மற்றும் மாணவர்கள் தற்கொலைகள் குறித் தெல்லாம் குறிப்பிட்டு, இனியும் தாமதிக்காமல் மேற்படி சட்டமுன்வடிவிற்கு ஒப்புதல் அளிக்க வேண்டுமென தான் கோரியிருந்ததை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதோடு, ஒன்றிய சுகாதார மற்றும் குடும்ப நல அமைச்சகத்தின் சமீபத்திய கேள்விகளுக்கும் தமிழ்நாடு அரசின் சார்பில் பதிலளிக்கப்பட்டுள்ளதாகவும், ஆனால் துரதிர்ஷ்டவசமாக, இதுவரை இந்தச் சட்ட முன்வடிவிற்கு ஒப்புதல் வழங்கப்படாத நிலை உள்ளது என்றும் முதலமைச்சர் அவர்கள் கவலைபடத் தெரிவித்துள்ளார்.

**தகுதி வாய்ந்தவர்களின் சேர்க்கை பறிப்பு!**

இந்தச் சூழ்நிலையில், நீட் விலக்கு தொடர்பான சட்டமுன்வடிவிற்கு ஒப்புதல் அளிப்பதில் ஏற்பட்டுள்ள அதீத காலதாமதம், அதிக கட்டணங்களைச் செலுத்தி பயிற்சி பெற முடியாத, பல தகுதிவாய்ந்த மாணவர்களின் மருத்துவ சேர்க்கையைப் பறித்துள்ளதாகவும், தமிழ்நாட்டில் பரந்த சட்டமன்ற, அரசியல் மற்றும் சமூக ஒருமித்த கருத்தின் நோக்கத்தைச் செயல்படுத்திட இயலாமல் முடக்கியுள்ள தாகவும் தெரிவித்துள்ள முதலமைச்சர் அவர்கள், இந்த உணர்வுப்பூர்வமான பிரச்சினையில் உடனடியாகத் தலையிட்டு, நீட் விலக்கு தொடர்பான மசோதாவுக்கு விரைவில் ஒப்புதல் அளிக்க வேண்டுமென இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களை வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளார்.

### கே.கே. செல்லபாண்டியன் தலைமையில் புதுக்கோட்டை மாவட்ட

# கழக அமைப்பு சாரா ஓட்டுநர் அணி நிர்வாகிகள் கூட்டம்!

## டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ. முன்னிலையில் நடைபெற்றது!

புதுக்கோட்டை, அக்.29-

தமிழ்நாடு முதல்வர், கழகத்தலைவர் அவர்கள் ஆணைக்கிணங்க, கழக இளைஞரணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழிகாட்டுதலோடு, கழக அமைப்பு சாரா ஓட்டுநர் அணி மாநில தலைவர் டி.எம். கதிர் ஆனந்த் மற்றும் அணியின் மாநிலச் செயலாளர் டி.செங்குட்டுவன் ஆகியோரின் ஒப்புதலோடு, புதுக்கோட்டை வடக்கு மாவட்டக் கழக அமைப்பு சாரா ஓட்டுநர் அணியின் ஆலோசனை கூட்டம் 27.10.2023 அன்று புதுக்கோட்டை பெரியண்ணன் மாளிகை கீரை தமிழ்செல்வன் அவைக் கூடத்தில் புதுக்கோட்டை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் கழக அமைப்புசாரா ஓட்டுநர் அணி மாநில துணைச் செயலாளர் டாக்டர்.வை. முத்துராஜாஎம்.எல்.ஏ, அமைப்பு சாரா ஓட்டுநர் அணி வடக்கு மாவட்ட தலைவர் வெற்றிச்செல்வம், மாவட்ட அமைப்பாளர் முல்லை முபாரக் மற்றும் துணைத் தலைவர் துணை அமைப்பாளர்கள் முன்னிலையில் பல்வேறு தீர்மானங்கள் ஒருமனதாக நிறை வேற்றப்பட்டன.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்தநாள் விழாவை ஆண்டு முழுவதும் கொண்டாடுவது. நீட் விலக்கை வலியுறுத்த தமிழ்நாடு முழுதும் அதிகப்படியான ஓட்டுநர்களிடம் கையெழுத்து பெறுதல். ஆட்டோ நிறுத்தம்,லாரி நிறுத்தம், மார்க்கெட், டாடா ஏ.சி,மார்க்கெட், பேருந்து நிலையம், பேருந்து நிறுத்தம் ஆகிய இடங்களில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்தை வைத்து மலர் தூவி மரியாதை செலுத்தி கழக அமைப்பு சாரா ஓட்டுநர் அணியின் பெயர் பலகை வைத்தல்.

அமைப்பு சாரா ஓட்டுநர்களை அதிகப்படியான எண்ணிக்கையில் அரசு நல வாரிய உறுப்பினராக சேர்த்தல்.

ஒன்றிய கழகம் மற்றும் நகர கழகங்களில் விரைவில் அமைப்பு சாரா ஓட்டுநர் அணி நிர்வாகிகள் நியமித்தல்.

நலவாரியம் மூலம் பதிவுபெற்ற ஓட்டுநர்களுக்கு அரசின் திட்டங்களை செயல்படுத்தி கொடுத்தல். கோடைக் காலங்களில் பேருந்து நிலையங்களில் நீர், மோர் பந்தல் அமைத்தல். அமைப்பு சாரா ஓட்டுநர் அணியின் சார்பாக அதிகப்படியான ஓட்டுநர்களை கழகத்தில் புதிய உறுப்பினர்களாக சேர்த்தல். கழக அரசின் சாதனைகளை பொது மக்களிடம் கொண்டு செல்லும் வகையில் பேருந்து நிலையம் மற்றும் பேருந்து நிறுத்தங்களில் துண்டு பிரசுரங்கள் வழங்குதல். நலிவுற்ற ஓட்டுநர்களின் குடும்பத்திற்கு கழக அமைப்பு சாரா ஓட்டுநர் அணியின் சார்பாக உதவிகள் செய்தல் உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள்நிறைவேற்றப் பட்டன.

இந்நிகழ்வில் கழகத்தின் அனைத்து நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (27.10.2023) திருநெல்வேலி மாவட்டம், கீழநத்தம் பகுதியில் அமைந்துள்ள தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் நீச்சல் குளத்தை ஆய்வு செய்தார். நிதி மற்றும் மனித வள மேலாண்மைத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, சட்ட மன்ற உறுப்பினர் அப்துல் வஹாப் (பாளையங்கோட்டை) மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர். கா.ப.கார்த்திகேயன் உடனிருந்தனர்.

### ரூ.85.56 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும்

# நெல்லை சந்திப்பு, பெரியார் பேருந்து நிலையம் மறுசீரமைப்புப் பணி!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நேரில் ஆய்வு!

நெல்லை, அக்.29-

திருநெல்வேலி சந்திப்பு அருகே உள்ள பெரியார் பேருந்து நிலையம் மறுசீரமைப்பு பணி மற்றும் பாளையங்கோட்டை அண்ணா விளையாட்டு அரங்கம், கீழநத்தம் பகுதியில் அமைந்துள்ள நீச்சல் குளம் ஆகியவற்றை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நேற்று முன்தினம் (27.10.2023) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பின்னர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில் :

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு, முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின் படி, சட்டமன்ற தொகுதிக்கு ஒரு நூலகம் அமைத்து வருகிறோம். இதன் தொடர்ச்சியாக, திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி சட்டமன்ற தொகுதிக்கான நூலகம் நேற்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

திருநெல்வேலி மாவட்டத்தில் எண்ணற்ற விளையாட்டு வீரர்களை உருவாக்கிய பாளையங்கோட்டை அண்ணா விளையாட்டு அரங்கத்தில் இன்று ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. கேலரி தடகள ஓடுதளம் உள்ளிட்ட வசதிகளை பார்வையிட்டு அவற்றை முறையாக பராமரிக்க வேண்டுமென விளையாட்டு மேம்பாட்டு ஆணைய அதிகாரிகளிடம் அறிவுறுத்தப் பட்டுள்ளது.

தொடர்ந்து, கீழநத்தம் பகுதியில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், திருநெல்வேலி பிரிவிற்குட் பட்ட 50மீ பந்தய நீச்சல் குளம் பார்வையிடப்பட்டது. 50மீ பந்தய நீச்சல் குளத்திற்கு சீரமைப்பு பணிகள் மற்றும் வர்ணம் அடிக்கும் பணிகளுக்கு ரூபாய் 10.20 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதன் அடிப்படையில், சீரமைத்தல் மற்றும் பழுதுபார்த்தல் பணிகள் மேற்கொள்ளப் பட்டு வருகிறது. சீரமைக்கும் பணிகள் முடிவுற்று பொதுமக்கள் பயன்பாட்டிற்கு நவம்பர் 2023 முதல் வாரத்தில் வரும் என மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், திருநெல்வேலி சந்திப்பு பெரியார் பேருந்து நிலையம் மறுசீரமைப்பு பணி ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த பேருந்து நிலையமானது 4.27 ஏக்கர் பரப்பளவில் 4 வது ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் ரூ.85.56 கோடி மதிப்பில் மறுசீரமைப்பு பணி நடைபெற்று வருகிறது. இப்பேருந்து நிலையத்தில் முதல் தளம், இரண்டாம் தளம் மற்றும் மூன்றாம் தளம் வணிக பயன்பாட்டிற்கும், தரைத்தளத்தில் காத்திருப்போர் கூடம், உணவகம், காவல் அறை, மருத்துவ மையம், சி.சி.டி.வி அலுவலகமும், கீழ்த்தளத்தில் இரண்டு சக்கர வாகனம் மற்றும் 4 சக்கர வாகனங்கள் நிறுத்துவதற்கான வசதிகளுடன் அமைக்கப்பட்டு வருகிறது. 94 சதவீதம் கட்டுமானப் பணிகள் முடிவடைந்துள்ளது. எஞ்சிய பணிகள் நவம்பர் 2023 இறுதியில் முடிக்கப்பட்டு, முதலமைச்சர் அவர்களால் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆய்வின் போது, நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, திருநெல்வேலி நாடாளுமன்ற உறுப்பினர் சா.ஞானதிரவியம், பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வகாப், உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### க. சுப்பு

### அக்டோபர் 29 (2011)



**கழகத்தில் சிறந்த பேச்சாளராகவும், எழுத்தாளராகவும் திகழ்ந்தவர்.**

**மிசா சட்டத்தின்கீழ் ஓராண்டு கைதியாக சென்னை சிறையில் இருந்தார்.**

**சட்டமன்றத்தின் இரு அவைகளிலும் உறுப்பினராக திகழ்ந்து திறம்பட பேசி வாதிட்டவர்.**

**கழகத்தில் தொழிலாளர் அணிச் செயலாளராகவும், பல்வேறு தொழிற்சங்கங்களில் தலைவராகவும் பணியாற்றினார்.**

**"பகைவரையும், வசீகரிக்கக்கூடிய பேச்சாற்றலும், வாதத்திறமையும் பெற்றவர் சுப்பு" என தலைவர் கலைஞர் அவர்கள் இரங்கல் தெரிவித்தது குறிப்பிடத்தக்கதாகும்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**


நாள் : 30.10.2023
இடம் : பசும்பொன், ராமநாதபுரம்.
தேசியமும் தெய்வீகமும்
எனது இரு கண்கள்
என்ற தேவர் பெருமகனாரின் நினைவைப் போற்றும்
திராவிடமும் தமிழ்மொழியும்
தனது இரு கண்களாக போற்றும்
மாண்புமிகு
தமிழ்நாடு
முதலமைச்சர்
அவர்களின் தலைமையில் ஜெயந்தி விழாவை
போற்றி வணங்குவோம்... வாரீர்!
ARASU ARTS
அன்புடன் : ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் Bsc., BL.
பிற்படுத்தப்பட்டோர் (ம) கதர் கிராம தொழில் வளர்ச்சி அமைச்சர் / கழக தேர்தல் பணிக்குழு தலைவர்.
காதர்பாட்சா முத்துராமலிங்கம் M.L.A.,
இராமநாதபுரம் மாவட்ட கழக செயலாளர்
செ.முருகேசன் M.L.A.,
பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர்.


கலைஞர்
100
1924 - 2023
மாநில பொதுத்துறை நிறுவனங்களுக்கு 20 % போனஸ்
01.07.2023 முதல் 4 சதவிகித அகவிலைப்படி உயர்வு
வழங்கிய தொழிலாளர்களின் நம்பிக்கை நாயகர்
மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர்
முத்துவேல் கருணாநிதி
ஸ்டாலின்
அவர்களுக்கும்
மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும்
தொழிலாளர்கள் சார்பில் நெஞ்சார்ந்த
நன்றி ! நன்றி !! நன்றி !!!
மு.சண்முகம் M.P
பேரவை பொது செயலாளர்
கி.நடராசன்
பேரவை பொருளாளர்
LPF
தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவை
கலைஞரகம்
எண் : 25, தியாகராயா தெரு, வடக்கு உஸ்மான் சாலை,
தி.நகர், சென்னை – 17.
9444129952


நன்றி! நன்றி! நன்றி!
போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுக்கு 20% BONUS
1-7-2023 முதல் 4% அகவிலைப்படியை உயர்த்தி வழங்கிய
தொழிலாளர்களின் பாதுகாவலர்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
அவர்களுக்கும்
மாண்புமிகு சா.சி.சிவசங்கர்
போக்குவரத்துத் துறை அமைச்சர்
திருமிகு மு.சண்முகம் M.P.
பொதுச்செயலாளர் - தொ.மு.ச.பேரவை
திரு கி.நடராசன்
பொருளாளர் - தொ.மு.ச.பேரவை
ஆகியோருக்கும் எங்களின் இதயங்கனிந்த நன்றி!
மா.சுதாகரன் தலைவர்
கா.ரவி பொதுச்செயலாளர்
ஆ.முரளி பொருளாளர்
மற்றும் அனைத்து மத்திய சங்க நிர்வாகிகள் - பணிமனை நிர்வாகிகள்
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக தொ.மு.ச.
காஞ்சிபுரம் மண்டலம் - பதிவு எண் : 2148/MDS, LPF:700


நன்றி!
நன்றி!
நன்றி!
போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுக்கு 20% BONUS
1-7-2023 முதல் 4% அகவிலைப்படியை உயர்த்தி வழங்கிய
தொழிலாளர்களின் நம்பிக்கை நாயகர்
மாண்புமிகு
தமிழ்நாடு முதலமைச்சர்
அவர்களுக்கும்
மாண்புமிகு சா.சி.சிவசங்கர்
போக்குவரத்துத் துறை அமைச்சர்
திருமிகு மு.சண்முகம் M.P.
பொதுச்செயலாளர் - தொ.மு.ச.பேரவை
திரு கி.நடராசன்
பொருளாளர் - தொ.மு.ச.பேரவை
ஆகியோருக்கும் எங்களின் இதயங்கனிந்த நன்றி!
மு.வைத்திநாதன் தலைவர்
ப.பன்னீர்செல்வம் பொதுச்செயலாளர்
மு.கருணாநிதி பொருளாளர்
சி.பி.இளங்கோ துணைப் பொதுச்செயலாளர்
மற்றும் அனைத்து மத்திய சங்க நிர்வாகிகள் - பணிமனை நிர்வாகிகள்
அரசு விரைவு போக்குவரத்துக் கழக தொ.மு.ச. பதிவு எண் : 3445/MDS, LPF:1027


நன்றி! நன்றி! நன்றி!
நுகர்பொருள் வாணிபக் கழக தொழிலாளர்களுக்கு
20% BONUS
தற்காலிக ஊழியர்களுக்கு
ரூ.3000/-
கருணைத் தொகையும் வழங்கிட உத்தரவிட்ட
தொழிலாளர்களின்
ஒப்பற்ற பாதுகாவலர்
மாண்புமிகு
தமிழ்நாடு
முதலமைச்சர்
அவர்களுக்கும்
கோரிக்கைக்கு துணைநின்ற
மாண்புமிகு அர.சக்கரபாணி
உணவுத்துறை அமைச்சர்
திருமிகு மு.சண்முகம் M.P.
பொதுச்செயலாளர் - தொ.மு.ச.பேரவை
ஆகியோருக்கும் எங்களின்
இதயங்கனிந்த நன்றி!
தொழிலாளர்களின் நலம்! தமிழ்நாட்டின் பலம்!
தமிழ்நாடு சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் எம்ப்ளாயீஸ் யூனியன்
பதிவு எண். 325 / சிபிடி பேரவை இணைப்பு எண் : 325 தொ.மு.ச. தலைமைச் சங்கம், சென்னை – 600 010.



நாள் : 27, 28, 29.
அக்டோபர் 2023
இடம் : ஏ.ஜி.எஸ் ஹாலிடே ரிசார்ட், ஏலகிரி மலை
29-10-2023 இன்று
தி.மு.க. மாணவர் அணி சார்பில்
மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்களுக்கான
கருத்தியல் பயிலரங்கம்
நிறைவு விழாவிற்கு வருகை தரும்
கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர்
திருவண்ணாமலை தெற்கு மாவட்ட கழக செயலாளர்
மாண்புமிகு. எ.வ.வேலு
பொதுப்பணி (ம) நெடுஞ்சாலைத்துறை அமைச்சர், அவர்களை
வருக ! வருக !! என அன்புடன் வரவேற்கும்...
சி.வி.எம்.பி.எழிலரசன் B.E., B.L., MLA.,
செயலாளர்
இரா.ராஜீவ்காந்தி தலைவர்
சி.ஜெரால்டு இணைச் செயலாளர்
எஸ்.மோகன் இணைச் செயலாளர்
துணைச் செயலாளர்கள்
மன்னை த.சோழராஜன்
சேலம் ரா.தமிழரசன்
அதலை பி.செந்தில்குமார்
தமிழ் கா.அமுதரசன்
பி.எம்.ஆனந்த்
கா.பொன்ராஜ்
வி.ஜி.கோகுல்
பூரணசங்கீதா சின்னமுத்து
ஜெ.வீரமணி
தி.மு.க மாணவர் அணி




வாழ்க தளபதி
வளர்க தொமுச
நன்றி! நன்றி!! நன்றி!!!
போக்குவரத்து தொழிலாளர்களுக்கு 20 சதவித போனஸ் அறிவித்த
தமிழக முதல்வர் மாண்புமிகு
தளபதி ஸ்டாலின் அவர்களுக்கும்
அறிவிக்க காரணமாக இருந்த
மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்,
சா.சி.சிவசங்கர் B.E., M.B.A., அவர்களுக்கும்
கோரிக்கை வைத்து பெற்று தந்த பேரவை பொதுச் செயலாளர்
மரியாதைக்குரிய
மு.சண்முகம் MP அவர்களுக்கும்
பேரவை பொருளாளர்
மதிப்புமிகு
கி.நடராசன் அவர்களுக்கும்
நன்றி! நன்றி!! நன்றி!!!
P.பழனிவேல் தலைவர்
தங்க.ஆனந்தன் பொதுச் செயலாளர்
பால.செந்தில்நாதன் பொருளாளர்
மற்றும் அனைத்து நிர்வாகிகள்
A.K.S. Digital Printing 9626282025 Chidambaram
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக
தொழிலாளர் முன்னேற்றச் சங்கம்
பதிவு எண்.218/CDR பேரவை இணைப்பு எண்.1002/2009
கடலூர் - மண்டலம்.




கடுமையான நிதிநெருக்கடியிலும் அரசு போக்குவரத்து தொழிலாளர்களுக்கு
20 சதவீதம் போனஸை தாயுள்ளத்துடன் வழங்கிய
தமிழ்நாடு முதலமைச்சர்
அவர்களுக்கு நன்றி! நன்றி!! நன்றி!!!
மு.சண்முகம் MP பேரவை பொதுச் செயலாளர்
கி.நடராஜன் பேரவை பொருளாளர்
ப.சென்னியப்பன் மண்டல தலைவர்
ஜீவா.கே.கே.துரைசாமி மண்டல பொதுச்செயலாளர்
ஜி.மணி மண்டல இணை பொதுச்செயலாளர்
சு.சின்னக்கண்ணன் மண்டல பொருளாளர்
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக
தொழிலாளர் முன்னேற்றச் சங்கம்
அனைத்து தொழிலாளர்கள் - திருப்பூர் மண்டலம்



கலைஞர் 100 1924 - 2023
தமிழ்நாடு அரசு போக்குவரத்து
கழக தொழிலாளர்களுக்கு
20% போனஸ்
அறிவித்த
மாண்புமிகு.
தமிழ்நாடு முதல்வர்
மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும்
மாண்புமிகு. போக்குவரத்துத்துறை அமைச்சர்
சா.சி.சிவசங்கர் அவர்களுக்கும்
ஈரோடு மண்டல போக்குவரத்து தொழிலாளர் முன்னேற்ற சங்கத்தின் சார்பாக
நன்றி! நன்றி !! நன்றி !!!
பேரவை பொதுச்செயலாளர்
மு.சண்முகம் MP
பேரவை பொருளாளர்
கி.நடராஜன்
K.K.பழனிச்சாமி தலைவர்
V.பாலசுப்பிரமணியம் பொதுச்செயலாளர்
R.ரங்கநாதன் பொருளாளர்
தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக தொழிலாளர் முன்னேற்ற சங்கம்
ஈரோடு மண்டலம்




நன்றி ! நன்றி !! நன்றி !!!
கலைஞர் 100 1924 - 2023
போக்குவரத்து கழக தொழிலாளர்களுக்கு
20% சதவிகித போனஸ் வழங்கிட ஆணை பிறப்பித்த
போக்குவரத்து தொழிலாளர்களின் குடும்பத்தலைவர்
மாண்புமிகு. மு.க.ஸ்டாலின்
தமிழ்நாடு முதலமைச்சர்
மாண்புமிகு. சா.சி.சிவசங்கர் ,B.E.,MBA.,
போக்குவரத்துத்துறை அமைச்சர்
உயர்திரு. மு.சண்முகம் ,MP.,
தொ.மு.ச பேரவை பொதுச் செயலாளர்
உயர்திரு. கி.நடராசன்
தொ.மு.ச பேரவை பொருளாளர்
ஆகியோருக்கு எங்களது மண்டலத்தின் சார்பில்
நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.
MK STUDIO Cell : 9500758141
தி.செங்குட்டுவன் ,Ex.MLA.,
சிறப்பு தலைவர்
ஆ.சின்னசாமி தலைவர்
பா.கிருஷ்ணன் பொது செயலாளர்
கு.சேகர் பொருளாளர்
TNSTC தொ.மு.ச - தருமபுரி மண்டலம்




கலைஞர் 100 1924 - 2023
அரசு போக்குவரத்து கழக தொழிலாளர்களுக்கு 20% போனஸ்,
01.07.2023 முதல் 4 சதவிகித அகவிலைப்படி உயர்வு
வழங்கிய, தொழிலாளர்களின் நம்பிக்கை நட்சத்திரம்
திராவிட நாயகன்
மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர்
முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்
அவர்களுக்கும்
மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்
சா.சி.சிவசங்கர் அவர்களுக்கும்
தொழிலாளர்கள் சார்பில் நெஞ்சார்ந்த
நன்றி ! நன்றி !! நன்றி !!!
திரு. மு.சண்முகம் MP
பொதுச்செயலாளர் - தொ.மு.ச பேரவை
திரு. கி.நடராசன்
பொருளாளர் - தொ.மு.ச பேரவை
கோ.மோகன்குமார் தலைவர்
த.சரவணகுமார் பொதுச்செயலாளர்
கி.சீனிவாசன் பொருளாளர்
9444129952
மாநகர் போக்குவரத்துக் கழக ஊழியர் முன்னேற்ற சங்கம்
பதிவு எண் : 605/MDS பேரவை இணைப்பு எண் : 287



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை தமிழ்நாடு மின் கழக தொ.மு.ச. மாநில பொதுச் செயலாளர் மணிமாறன், சுவிட்சர்லாந்து நாட்டின் ஜெனீவா நகரில் 15.10.2023 முதல் 18.10.2023 வரை நடைபெற்ற சர்வதேச பொதுச்சேவை சம்மேளனமான Public Service International அமைப்பின் 31வது உலக தொழிற்சங்க மாநாட்டில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி சென்னை திரும்பியதையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



சேலம் மாவட்டம் பெத்தநாயக்கன் பாளையத்தில் வருகின்ற டிசம்பர் மாதம் 17 ஆம் தேதி கழக மாநில இளைஞரணி இரண்டாவது மாநாடு நடைபெறும் இடத்தில் பந்த கால் அமைக்கும் பணியினை நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு தொடங்கி வைத்தார். நிகழ்ச்சியில் மாவட்டச் செயலாளர்கள் எஸ்.ஆர்.சிவலிங்கம் (கிழக்கு), எம்.எல்.ஏ. ஆர்.ராஜேந்திரன் (மத்திய), டி.எம்.செல்வகணபதி (மேற்கு), கள்ளக்குறிச்சி மாவட்டச் செயலாளர் கார்த்திகேயன் எம்.எல்.ஏ., நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.பார்த்திபன், மாவட்ட துணைச் செயலாளர்கள் சுரேஷ்குமார், சின்னதுரை, கோமதி, மாவட்டப் பொருளாளர் ஸ்ரீராம்,மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் டாக்டர் தருண், பொதுக் குழு உறுப்பினர்கள் முத்துலிங்கம், மனோகரன், சங்கர், கோபால், சோம சுந்தரம், ஒன்றியச் செயலாளர்கள் வெண்ணிலா, உமாசங்கர், விஜயகுமார், சக்கரவர்த்தி, மாதேஸ்வரன், அன்பு (எ) மருதமுத்து, மூர்த்தி, சிவராமன், டாக்டர் செழியன், சித்தார்த்தன், அழகுவேல், மணி, பாலமுருகன், நகரச் செயலாளர்கள் வேல்முருகன், பாலசுப்பிரமணியன், பேரூர் செயலாளர்கள் வெங்கடேசன், பாபு, செல்வம், சுப்பிரமணியன், சார்பு அணி நிர்வாகிகள் ஏ.ஏ.ஆறுமுகம், முனைவர் சீனிவாசன், ரமேஷ், வரத.ராஜசேகர், சேகர், அருண், ஏத்தாப்பூர் பேரூராட்சி தலைவர் அன்பழகன் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

திருநெல்வேலி மாவட்டத்தில்

# அனைத்துத்துறை அலுவலர்களுடனான ஆய்வுக்கூட்டம்!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பங்கேற்றார்!

நெல்லை, அக்.29-

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் அனைத்துத்துறை அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில், தமிழ்நாடு சட்டமன்ற பேரவைத் தலைவர் மு.அப்பாவு, நிதி மற்றும் மனித வள மேலாண்மைத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, பால் வளத்துறை அமைச்சர் த. மனோதங்கராஜ் ஆகியோர் முன்னிலையில் அனைத்துத் துறை அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் நேற்று முன்தினம் (27.10.2023) நடைபெற்றது.

கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் கீழ், முதல்வரின் முகவரி, மனுக்கள் மீது தீர்வு காணுதல், பட்டா மாறுதல், பட்டா மேல் முறையீடு, சாலை விபத்துக்களுக்கான நிவாரணம், இசேவை மையங்கள், மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத்துறை பாலின விகிதம், நோய்வாய்ப்பட்ட புதிதாகப் பிறந்த குழந்தை சேர்க்கை, கதவுற்ற வளர் இளம் பெண்கள், டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவி திட்டம், தாய்மார்கள் இறப்பு, ஆர்பிஎஸ்கே -அங்கன்வாடி மற்றும் பள்ளிகள் பரிசோதனை, ஆர். பி.எஸ்.கே. செயல்திறன், ஆர். பி.எஸ்கே திட்டத்தின் கீழ் 7 முக்கிய அறுவை சிகிச்சைகளின் செயல்திறன், மக்களை தேடி மருத்துவம், முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டம், இன்னுயிர் காப்போம் திட்டம்நம்மை காக்கும் 48, கல்வி கற்றல் திறன் வருடாந்திர கல்வி நிலை அறிக்கை, நீண்ட நாட்களாக பள்ளிக்கு வராத மாணவர்கள், பள்ளி செல்லாக் குழந்தைகள் கணக்கெடுப்பு, 10ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்கள், 12ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்கள், உயர்கல்வியில் சேர்ந்த மாணவர்களின் எண்ணிக்கை, ஆதிதிராவிடர் விடுதி மாணவர்கள் 10ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பு, பிற்படுத்தப்பட்டோர் விடுதி மாணவர்கள் 10 மற்றும் 12ஆம் வகுப்பு, பள்ளி உட்கட்டமைப்பு கீழ அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளின் விபரம், உயர்கல்வி, வேலைவாய்ப்பு முகாம், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள், அங்கன்வாடி உட்கட்டமைப்பு, புதுமைப்பெண் இரண்டாம் கட்டத் திட்டம், குழந்தை திருமணம், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, திட்ட அனுமதி/ ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு, நகர்ப்புற பகுதிகளில் கேட்பு -வசூல் நிலுவை, பேருந்து நிலையங்கள், நகராட்சி சாலைகள், பேரூராட்சி சாலைகள், மின் மயானம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் கீழ் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித்திட்டம், முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டம், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித்திட்டம், பிரதம மந்திரி குடி யிருப்புத் திட்டம் (ஊரகம்), 15வது நிதிக்குழு பணி முன்னேற்றம், குடிநீர் விநியோகம், பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத்திட்டம், குழந்தை நேய பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம், ஊரக பகுதிகளில் கேட்பு வசூல் நிலுவை, சுய உதவிக் குழுக்களில் உள்ள இலக்கு மக்கள் குடும்பங்களின் விபரம், சுய உதவிக்குழுக்கள் கடன் இணைப்பு, வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறையின் கீழ் நுண்ணீர் பாசன செயல்பாடுகள், பயிர் சாகுபடி பரப்பு, தோட்டக்கலை மற்றும் மலை பயிர்கள் துறை, உழவர் சந்தைகளின் செயல்பாடுகள், இநாம், இவாடகை, கால்நடை, பால்வளம், ஆவின் கூட்டுறவு சங்கங்களின் செயல் திறன், ஆதிதிராவிடர் நலத்துறை (தாட்கோ), வன உரிமைச் சட்டம், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் துறை, பிரதம மந்திரி உணவுப் பதப்படுத்தும் குறு நிறுவனங்களுக்கான திட்டம், நெடுஞ்சாலைகள், உள்துறை சாலைப்பாதுகாப்பு, போக்சோ வழக்குகள், வட்டார போக்குவரத்து அலுவலகம், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, இராதாபுரத்தில் விளையாட்டு அரங்கம் மற்றும் பயிற்சி மையம், அண்ணா ஸ்டேடியம் வ.உ.சி பல்நோக்கு உள்விளையாட்டரங்கம், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், முத்திரைத் திட்டங்கள் திருநெல்வேலி செங்கோட்டை கொல்லம் சாலை - நான்குவழிச் சாலையாக உறுதிப்படுத்து தல் மற்றும் அகலப்படுத்துதல், கூட்டுக் குடிநீர் திட்டங்கள், புறவழிச் சாலை பணிகள் ஆகிய துறைகளின் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மற்றும் செயல்பாடுகள் குறித்து இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்கள் கேட்டறிந்தார்கள்.

முன்னதாக, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், மாவட்ட ஆட்சியர் அலுவலக முதல் தளத்தில் வருவாய்த்துறை சார்பில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள நூலகத்தை தமிழ்நாடு சட்டமன்ற பேரவைத் தலைவர் மு.அப்பாவு, நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு ஆகியோர் முன்னிலையில் திறந்து வைத்தார்.

இக்கூட்டத்தில் திருநெல்வேலி நாடாளுமன்ற உறுப்பினர் சா.ஞானதிரவியம், பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வகாப், திருநெல்வேலி மாநகராட்சி மேயர் பி.எம்.சரவணன், சிறப்பு திட்ட செயலாக்கத்துறை செயலர் தாரேஸ் அகமது, மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர் கா.ப. கார்த்திகேயன், மாநகர காவல் ஆணையர் திருமதி.மகேஸ்வரி, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சிலம்பரசன், மாவட்ட வருவாய் அலுவலர்கள் திருமதி.மா.சுகன்யா, திருமதி. ரேவதி, மாநகராட்சி துணை மேயர் கே.ஆர்.ராஜு, மாவட்ட ஊராட்சித் தலைவர் வி.எஸ்.ஆர்.ஜெகதீஷ், முன்னாள் சட்டப்பேரவைத் தலைவர் இரா.ஆவுடையப்பன், முன்னாள் அமைச்சர் டி.பி. எம்.மைதீன்கான் மற்றும் அனைத்துத்துறை அரசு அலுவலர்கள், முக்கிய பிரமுகர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



திருநெல்வேலி சந்திப்பு அருகே உள்ள பெரியார் பேருந்து நிலையம் மறுசீரமைப்பு பணியினை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், நிதி மற்றும் மனித மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு முன்னிலையில் நேற்று முன்தினம் (27.10.2023) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை செயலர் தாரேஸ் அகமது, மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர் கா.ப.கார்த்திகேயன், திருநெல்வேலி நாடாளுமன்ற உறுப்பினர் சா.ஞானதிரவியம், பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வகாப், திருநெல்வேலி மாநகராட்சி மேயர் பி.எம்.சரவணன், திருநெல்வேலி மாநகராட்சி ஆணையாளர் தாக்கரே சுபம் ஞானதேவ் ராவ், துணை மேயர் கே.ஆர்.ராஜு, முன்னாள் சட்டப்பேரவைத் தலைவர் இரா.ஆவுடையப்பன், மாவட்ட ஊராட்சித் தலைவர் வி.எஸ்.ஆர்.ஜெகதீஷ், முன்னாள் அமைச்சர் டி.பி.எம்.மைதீன்கான் மற்றும் அரசு அலுவலர்கள், முக்கிய பிரமுகர்கள் உட்பட பலர் உள்ளனர்.

ஆளுநர் மாளிகை சொன்னதெல்லாம் உண்மைக்கு மாறானது!

# சி.சி.டி.வி. காட்சி - புகைப்படங்கள் வெளியிட்டது காவல்துறை!

## உண்மை அம்பலமாகியுள்ளது!

சென்னை, அக்.29-

ஆளுநர் மாளிகைக்கு வெளியே பெட்ரோல் பாட்டில் வீச்சு சம்பவம் குறித்து ஆளுநர் மாளிகை அளித்த புகார் முற்றிலும் உண்மைக்கு மாறானது, பொய்யானது என்று தமிழ்நாடு காவல்துறை சி.சி.டி.வி. வீடியோ காட்சிகள் மற்றும் புகைப்படங்களை ஆதாரத்துடன் வெளியிட்டு ஆளுநர் மாளிகையின் புகார் பொய்ப்புகார் என்பதை அம்பலப்படுத்தியுள்ளது.

இது குறித்த விவரம் வருமாறு:-

சென்னை கிண்டியில் உள்ள ஆளுநர் மாளிகை முன்பு பெட்ரோல் பாட்டில் வீசப்பட்ட சம்பவத்தில் பிரபல ரவுடியான கருக்கா வினோத் என்பவர் பெட்ரோல் பாட்டிலை வீசிவிட்டு தப்பிக்க முயன்றபோது கருக்கா வினோத்தை போலீசார் உடனடியாக விரட்டிப் பிடித்து கைது செய்தனர்.

உடனடியாக எப்.ஐ. ஆரும் பதிவு செய்யப்பட்டு, சிறையில் அடைத்தது மட்டுமின்றி மேல்கொண்டும் தொடர்ந்து விசாரித்து வருகின்றனர். குற்றவாளியை காவலில் எடுத்து விசாரிக்கவும் நீதிமன்றத்தில் போலீசார் மனு தாக்கல் செய்துள்ளனர்.

இந்நிலையில் பெட்ரோல் பாட்டில் வீச்சு சம்பவம் தொடர்பாக ஆளுநர் மாளிகை சார்பில் சென்னை மாநகர காவல் ஆணையர் அலுவலகத்திலும், டி.ஜி.பி. அலுவலகத்திலும் புகார் அளிக்கப்பட்டது. அதில், சில விஷமிகள், பெட்ரோல் குண்டுகளுடன் ஆளுநர் மாளிகையின் பிரதான நுழைவாயில் 1 வழியாக ராஜ் பவனுக்குள் நுழைய முயன்றனர். ஆளுநர் மாளிகை பாதுகாப்பு காவலர்கள் அவர்களைத் தடுத்தனர். அப்போது ஒரு பெட்ரோல் குண்டை பிரதான நுழைவாயில் பகுதியில் வீசியுள்ளனர். அந்த குண்டு பெரிய சத்தத்துடன் வெடித்தது.

இதையடுத்து காவலர்கள் அந்த நபர்களை பிடிக்க முயன்ற நிலையில், மீண்டும் மற்றொரு பெட்ரோல் வெடி குண்டு வெடித்தது. இதில் ஆளுநர் மாளிகை பிரதான நுழைவாயில் பகுதி கடுமையாக சேதமடைந்துள்ளது என்றும் காவல்துறை வழக்குப் பதிவு செய்யவில்லை என்றும் ஆளுநர் மாளிகை குற்றம் சாட்டியது.

ஆனால், ஆளுநர் மாளிகையின் புகாருக்கு 26.10.2023 அன்று இரவே டி.ஜி.பி.சங்கர் ஜிவால் மறுப்பு அறிக்கை வெளியிட்டார்.

இந்நிலையில், ஆளுநர் மாளிகை முன் பெட்ரோல் குண்டு வீசிய கருக்கா வினோத், வந்தது, பெட்ரோல் குண்டு வீச முயன்றது, அவரை போலீசார் சுற்றி வளைத்துப் பிடித்து கைது செய்தது ஆகிய காட்சிகள் அடங்கிய சி.சி. டி.வி.காட்சிகளை காவல்துறையினர் வெளியிட்டனர். டி.ஜி. பி. சங்கர் ஜிவால், சென்னை மாநகர காவல் ஆணையர் சந்தீப் ராய் ரத்தோர் ஆகியோர் கூட்டாக நேற்று முன்தினம் (27.10.2023) செய்தியாளர்களைச் சந்தித்தனர்.

அப்போது, ஆளுநர் மாளிகை புகாரில் தெரிவிக்கப்பட்டது போல் ஒன்றுக்கும் மேற்பட்ட நபர்களால் பெட்ரோல் குண்டு வீசப்படவில்லை. வந்தது ஒரே ஒரு நபர் தான். அவர் அத்துமீறி ஆளுநர் மாளிகையினுள் நுழைய முற்பட்டு ராஜ் பவன் வாயிற்காப்பாளர்களால் தடுத்து நிறுத்தப்படவும் இல்லை. அவரை வெளியிலேயே சுற்றி வளைத்து தடுத்து கைது செய்தது காவல்துறையினர் தான் எனவும், ஆளுநர் மாளிகை சொன்னதெல்லாம் உண்மைக்கு முற்றிலும் புறம்பானது என்றும் டி.ஜி.பி. சங்கர் ஜிவால் தெரிவித்துள்ளார்.

சி.சி.டி.வி. காட்சிகளையும், புகைப்படங்களையும் ஆதாரமாக வெளியிட்டு, ஆளுநர் மாளிகை கூறிய புகார்கள் முற்றிலும் பொய்யானவை என தமிழ்நாடு காவல்துறை உண்மை ஆதாரங்களை வெளியிட்டு விளக்கம் அளித்துள்ளது.

### கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் பங்கேற்கும்

# திருச்சி தெற்கு மாவட்டத்தில் கொடியேற்று விழா நவம்பர் மாதத்திற்கு ஒத்திவைப்பு!

மாவட்ட கழகச் செயலாளரும் – அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிவிப்பு!



திருச்சி தெற்கு மாவட்டத்தில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை வருடத்திற்கு 100 நிகழ்ச்சி நடத்த திட்டமிட்டு மாதம் 10 நிகழ்ச்சி என இதுவரை 49 நிகழ்ச்சி நடத்தி முடித்து உள்ளோம். அக்டோபர் மாதத்துக்கான பத்தாவது நிகழ்ச்சி ஐம்பதாவது நிகழ்வாக கழகப் பொதுச் செயலாளர் - அமைச்சர் துரைமுருகன் அவர்கள் கலந்து கொண்டு கழக இரு வண்ண கொடியேற்றும் விழா மற்றும் அணிகளுக்கு கருத்துரை வழங்கும் கூட்டம் நவம்பர் மாதத்துக்கு மாற்றப்பட்டதால் வருகின்ற 31/10/2023 அக்டோபர் மாத பத்தாவது நிகழ்வாகவும் மொத்தமாக ஐம்பதாவது நிகழ்வாகவும் கலைஞர் நகர் பகுதியில் கலைஞர் நூற்றாண்டு விழா தெருமுனை கூட்டம் 64 & 64அ வட்ட கழக செயலாளர்கள் ஆர். விஜய் ஆனந்த், சி.துரைசாமி ஆகியோர் தலைமையில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் தலைமைக் கழக பேச்சாளர் "இனியன் அமுதன்" கலந்து கொண்டு உரையாற்றுகின்றார் .

அமைச்சர் **அன்பில் மகேஸ் பொய்யாமொழி,**
செயலாளர், திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க.




# மகளிருக்கு உரிமையைபெற்று கொடுத்தவர் தலைவர் கலைஞர்! அதை காத்து வருபவர் முதல்வர் - தலைவர் தளபதி!

மகளிர் உரிமையை பற்றி பேசுவதற்கு பி.ஜே.பிக்கு அ.தி.மு.க.வுக்கு எந்த தகுதியும் இல்லை எந்த உரிமையும் இல்லை தரம் இல்லாத பொறுப்பில்லாத தான்தோன்றித்தனமாக மக்களை கொச்சைப்படுத்தும் குறிப்பாக மகளிருக்கு எதிராக செயல்பட்ட பி.ஜே.பியோ அ.தி.மு.கவோ

மகளிரைபற்றி

மகளிர் உரிமையை பற்றி

மகளிர் இட ஒதுக்கீடு பற்றி

பேசுவதற்கு எந்த உரிமையும் இல்லை தகுதியும் இல்லை.

இந்தியாவிலேயே தமிழகத்தில் 2016 சட்டமன்றத் தேர்தலுக்கு ஒரு மாதத்திற்கு முன்பு நடந்த சட்டமன்ற கூட்டத்தில் அன்றைய முதலமைச்சர் அம்மையார் ஜெயலலிதா அவர்கள் உள்ளாட்சி அமைப்புகளுக்கு 50 சதவீதம் இட ஒதுக்கீடு வழங்குவதாக அறிவித்து விட்டு சென்றார்கள் சட்டமன்றத் தேர்தலில் எப்படியாவது பெண்களின் வாக்கை பெற வேண்டும் என்பதற்காக அறிவிப்பை மட்டும் அறிவித்துவிட்டு பெண்களை ஏமாற்றுவதற்கு உள்ளாட்சித் துறையில் இட ஒதுக்கீடு அறிவித்தார்கள்.

உண்மையாகவே பெண்களுக்கு உள்ளாட்சித் துறையில் 50 சதவீதம் இட ஒதுக்கீடு கொடுப்பவர்களாக இருந்திருந்தால் இரண்டு ஆண்டு முன்பு அறிவித்து முறையாக மாநகராட்சி நகராட்சி பேரூராட்சி கிராம பஞ்சாயத்து மாவட்ட பஞ்சாயத்து ஒன்றிய பஞ்சாயத்து அளவில் முறையாக ஆய்வு செய்து இட ஒதுக்கீடு ஆய்வு செய்து பணியாற்றி முறைப்படுத்தி இருந்தால் அதை ஏற்றுக் கொள்ளலாம் ஆனால் சட்டமன்றத் தேர்தலில் எப்படியாவது பெண்களின் வாக்கை பெற வேண்டும் என்பதற்காக போலியான ஒரு நாடகத்தை தேர்தலுக்கு ஒரு மாதத்திற்கு முன்பு அறிவித்து கேலிக்கூத்தாக்கி நாடகம் போட்ட அ.தி.மு.கவை மக்கள் பார்த்து சிரிக்கிறார்கள்.

இப்பொழுது இந்தியாவில் பிரதமர் மோடி அவர்கள் 33 சதவீதம் பெண்களுக்கு இட ஒதுக்கீடு பாராளுமன்றத்திலும் கொண்டு வருவேன் என்று கூறியுள்ளார் இன்னும் மூன்று அல்லது நான்கு மாதத்தில் பாராளுமன்ற தேர்தல் நடைபெறப் போகிற இந்த நேரத்தில் ஒன்றிய அரசு இந்தியா முழுவது வாழுகிற பெண்கள் ஒன்றிய அரசின் மீது கடுமையான கோபத்தில் பிஜேபியின் மீது வெறுப்போடு எதிர்ப்பு நிலைப்பாட்டில் இருக்கிறார்கள்.

அதனால் இவர்கள் இந்தியா முழுவதும் பெண்கள் மனநிலை பி.ஜே.பிக்கு எதிர்ப்பாக இருப்பதால் அவர்களை எப்படியாவது சமாதானப்படுத்தி வாக்குகள் பெற்று விட வேண்டும் என்பதற்காக ஒரு நாடகம் நிறைவேற்றி மகளிருக்கு 33 சதவீதம் பாராளுமன்றத்தில் இட ஒதுக்கீடு கொடுப்பதற்காக இரண்டு அவைகளிலும் அனைத்து கட்சி ஆதரவோடு நிறைவேற்றப்பட்டு மேதகு ஜனாதிபதி அவர்களும் கையெழுத்திட்டு 2029 நடைமுறைப்படுத்துவோம் என்று 5 ஆண்டுகளுக்கு தள்ளி வைத்து அறிவித்து விட்டார்கள்.

எந்த சூழ்நிலையிலும் இவர்கள் மகளிருக்கு 33 சதவீதத்திற்கான ஆய்வு செய்ய மாட்டார்கள் எந்தப் பணியும் செய்ய மாட்டார்கள் வாய்ப்பும் கொடுக்க மாட்டார்கள் மகளிரை மதிக்கவும் மாட்டார்கள் இதெல்லாம் ஒரு தேர்தலுக்கான ஒரு மாயத் தோற்றத்தை ஏற்படுத்தி இருக்கிறார்கள்.

எப்படி இந்தியா முழுவதும் கடந்த நான்கு ஆண்டுகளாக தொடர்ந்து கச்சா எண்ணையும் எரிவாயும் விலை குறைந்து இந்தியா ரஷ்யாவில் இருந்தும் மற்ற நாடுகளில் இருந்து குறைந்த விலைக்கு வாங்கி ஒரு ரூபாய் கூட டீசலுக்கு பெட்ரோலுக்கு குறைக்காமல் எரிவாய் சமையல் சிலிண்டருக்கும் குறைக்காமல் 1150 ரூபாய்க்கு விற்பனை செய்து ஆண்டுக்கு ஒரு லட்சம் கோடிக்கு மேல் இந்திய பொதுத்துறை நிறுவனமான எண்ணெய் கம்பெனிகள் லாபம் பெற்றிருக்கிறது.



கோவை கே.செல்வராஜ்
முன்னாள் எம்.எல்.ஏ.
கழக செய்தி தொடர்பு துணைச் செயலாளர்

இந்த எண்ணெய் கம்பெனிகள் எல்லாம் ஆரம்பிக்கப்பட்டது இந்தியாவில் இருக்கும் அனைத்து மக்களுக்கும் குறைந்த விலையில் முறையாக எல்லா இடங்களிலும் பெட்ரோல், டீசல், மண்ணெண்ணெய், கேஸ் சிலிண்டர் எல்லாம் கிடைக்க வேண்டும் என்பதற்காகத்தான் ஆரம்பிக்கப்பட்டது.

அனைத்து எண்ணெய் நிறுவனங்களையும் பொதுத்துறை அரசு நிறுவனங்களை மார்க்கெட்டில் என்ன விலைக்கு விலை விற்கப்படுகிறது டீசல் பெட்ரோல் வாங்கும் பொழுது விலை ஏற்றங்கள் வந்தால் மார்க்கெட் விலைக்கு விலையேற்றி விற்பதற்கு அனுமதி கொடுத்து விட்டார்கள்.

வாங்கப்பட்ட கச்சாஎண்ணெய்விலை கடுமையாக குறைந்த பிறகு கூட குறைக்காமல் மக்களுக்கு விலை ஏற்றி தொடர்ந்து 3ஆண்டுக்கு மேலாக விற்று வருவது எந்த விதத்தில் நியாயம்.

இதுதான் மக்களுக்கு உதவி செய்கிற ஒன்றிய அரசின் செயலா. பெண்களுக்கு விரோதமான பிஜேபி ஒன்றிய அரசை மக்கள் வெறுக்கிறார்கள்

இரண்டு ஆண்டுகளாக கொரோனாவில் பாதிக்கப்பட்டு வாழ வழியின்றி உண்ண உணவின்றி சிறு குறு தொழில் செய்பவர்கள் பாதிக்கப்பட்டு எல்லா மக்களும் ஒட்டுமொத்த இந்தியாவில் இரண்டு ஆண்டுகளில் கடுமையாக தொடர் ஊரடங்கு நாடுமுழுவதும் அறிவித்த ஒன்றிய அரசினுடைய செயலால் பாதிக்கப்பட்டு இன்னும் அவர்கள் ஒரு நிலையான ஒரு இடத்துக்கு வர முடியாத அளவுக்கு கடுமையான பொருளாதார நிதி நெருக்கடியில் வாழ்ந்து வருகிறார்கள்.

அந்த மக்களை காப்பாற்றுவதற்கு இந்த நேரத்தில் ஒன்றிய அரசு உதவ வேண்டாமா? ஐந்து மாநிலங்களில் சட்டமன்றத் தேர்தல் வருகிறது என்பதற்காக எரிவாயு சிலிண்டர் விலையில் 200 ரூபாய் ஒரு 100 ரூபாயாக 300 ரூபாய் குறைத்து இருக்கிறீர்கள் ஏன் ஓர் ஆண்டுக்கு முன்பே உண்மையாக விலை குறைக்க எண்ணம் இருந்திருந்தால் குறைத்து இருக்கலாமே ஏன் குறைக்கவில்லை இந்த தேர்தலில் பெண்களுடைய வாக்கு கிடைக்காமல் போய்விடும் என்கிற பயத்தில் 300 ரூபாய் குறைத்து இருக்கிறீர்கள்.

நீங்கள் என்ன சொன்னீர்கள் 2014 இல் ஆட்சிக்கு வந்த பொழுது இனிமேல் ஒன்றிய அரசு இந்தியா முழுவதும் அனைத்து மாநில மக்களுக்கும் அவரவர்கள் வங்கி கணக்கில் எரிவாயு சமையல் சிலிண்டருக்கு டீசல் பெட்ரோல் மண்ணெண்ணெய் உரமானியம் அரசு கொடுக்கும் மானியங்கள் நேரடியாகவே மக்களுக்கு போய் சேரும் மாநில அரசுகள் மூலம் இனிமேல் கொடுக்க மாட்டோம் என்று கூறினீர்கள்.

ஆனால் எந்த ஒரு விவசாயிக்கும் உரங்கள் வாங்குகின்ற பொழுது அவருடைய பில் தொகையில் எவ்வளவு வாங்கி இருக்கிறார்கள் என்பதை கணக்கு கேட்டு வங்கி கணக்கு எண்ணை வாங்கி ஆதார் அடையாள அட்டை வாங்கி என்றைக்காவது அவர்கள் வங்கிக் கணக்கில் மானியம் கொடுக்கப்பட்டிருக்கிறதா விவசாயிகளுக்கு 2014க்கு முன்பு காங்கிரஸ் ஆட்சியில் நிறைய மானிய தொகையை கொடுத்து வந்தார்கள் ஒருமுறை 77 ஆயிரம் கோடி ரூபாய் விவசாயிகளின் கடனை ஒன்றிய அரசு தள்ளுபடி செய்தது.

ஆனால் 2014 இல் ஆட்சிக்கு வந்த பிஜேபி விவசாயிகளின் உரம் மானியம் கொடுக்கவில்லை அவர்களுக்கு இலவச மின்சாரத்தையும் நாடு முழுவதும் கொடுக்கவில்லை மின்கட்டணத்தை உயர்த்தினீரகள் விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் கொடுக்க வேண்டாம் என்று பி.ஜே.பி. ஒன்றிய அரசு வற்புறுத்தி வருகிறது அதை எல்லாம் தாண்டி அதை எல்லாம் ஏற்றுக் கொள்ளாமல் மக்கள் நல அரசு தமிழக அரசு திராவிட மாடல் அரசு முதலமைச்சர் தளபதி அவர்கள் தமிழ்நாடு முழுவதும் இருக்கிற சுமார் 31 லட்சம் விவசாயிகளுக்கு கட்டணம் இல்லாத இலவச மின்சாரம் வழங்கி அந்த மின் தொகையை மாநில அரசு பொறுப்பேற்று மின்வாரியத்துக்கு பணம் செலுத்தி வருகிறது.

கார்ப்பரேட் தொழில் நிறுவனங்களுக்கு இன்றைக்கு நாடு முழுவதும் இந்த ஒன்பது ஆண்டுகளில் 15 லட்சத்து 30 ஆயிரம் கோடி ரூபாய் கடனை வராத கடன் என்று அறிவித்து வட்டியும் குறைத்து தள்ளுபடி செய்து இருக்கிறார்கள் இதற்கு யார் இவர்களுக்கு உரிமையை கொடுத்தது அவர்களுக்கு இவர்கள் குறைப்பதற்கு என்ன உரிமை இருக்கிறது அரசாங்கத்தால் யாருக்கு வேண்டுமென்றாலும் மக்களுடைய வரிப்பணத்தை எடுத்துக் கொடுத்து விட முடியுமா என்பதை மக்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

13 கோடிக்கு மேல் உள்ள சிறு குறு தொழில் செய்கிற நிறுவனங்களை கொரோனா காலத்தில் கண் துடைப்புக்காக ஒரு ஆறு மாத காலம் வட்டியும் அசலும் கட்டுவதற்கு தள்ளிவைப்பதாக சொல்லிவிட்டு ஆறு மாதம் முடிந்ததும் ஒட்டுமொத்தமாக எல்லா வங்கிகளும் அனைத்து தவணைத்தொகையை உடனடியாக கட்ட வேண்டும் என்று வசூல் செய்ய ஆரம்பித்து விட்டார்கள்.

அவர்களுக்கு அரசு உதவி இருந்தால் குறிப்பாக சுமார் 8 லட்சம் கோடி தான் சிறுதொழில் புரிபவர்கள் உடைய கடன் அதை தள்ளுபடி செய்து கொடுத்திருந்தால் சுமார் 13 கோடி சிறுகுறு தொழில் புரிபவர்கள் இந்தியாவில் மீண்டும் சிறப்பான முறையில் தொழிலை நடத்தி அவர்கள் ஒருநல்ல நிலைப்பாட்டோடு வந்திருப்பார்கள் ஆனால் இன்றும் அவர்களால் தொழிலை முறையாக நடத்த முடியாமல் இன்றும் நெருக்கடியில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் இந்த பெரிய கார்ப்பரேட் கம்பெனிகளால் இந்தியாவுக்கு என்ன லாபம் அவர்கள் பாதி பேர் வெளிநாட்டு கம்பெனிகள் வருகிற வருமானத்தை வெளிநாட்டுக்கு எடுத்துச் சென்று விடுகிறார்கள் இங்கே குறைந்த சம்பளத்தை கொடுத்து நம்முடைய படித்த மாணவ மாணவியர்களை 12 மணி நேரத்துக்கு மேல் வேலை வாங்கி கொண்டு கம்பணி நடத்திக் கொண்டிருக்கிறார்கள்

இன்றைய பி.ஜே.பி. அரசு இந்த 15 லட்சம் கோடி கடனும் வரா கடன் என்றும் வட்டியும் தள்ளுபடி செய்த பணத்தை இந்திய அரசினுடைய எந்தெந்த வங்கிகளுக்கு தள்ளுபடி செய்ய சொல்லி உத்தரவு தெரிவித்தீர்களோ அந்த வங்கிகளுக்கு திருப்பி கொடுக்க வேண்டும் ரிசர்வ் பேங்க் ஆப் இந்தியா கடுமையான நடவடிக்கை எடுத்து வங்கிகளை காப்பாற்ற வேண்டும்.

தனியார் நிறுவனங்களை நியமிப்பது

குண்டர்களை வைத்து மிரட்டுவதும்

சட்டப்படி நியாயமா அது முறையல்ல அதை தடுப்பதற்கு ஆர்.பி.ஐ. வங்கிகளுக்கு உத்தரவிட வேண்டும்.

எப்பொழுதெல்லாம் எந்த மாநிலத்தில் தேர்தல் நடக்கிறதோ அந்த மாநிலத்திற்கு நேரில் சென்று பிரதமர் அவர்கள் 15,000 கோடிரூபாய்20.000கோடிரூபாய்என்றுதிட்டங்களைஅறிவித்து அடிக்கல் நாட்டிவிட்டு வந்து விடுகிறார் உதாரணமாக கர்நாடகாவில் ஏராளமான திட்டங்களை அறிவித்தார் மாநில அரசுகள் மக்கள் நலனுக்காக கொடுக்கிற உதவிகளை இலவசங்கள் கொடுக்க கூடாது என்று கடுமையாக கண்டித்து பேசிய பிரதமர் அவர்கள் கர்நாடகா தேர்தலில் ஒரு குடும்பத்துக்கு தினசரி 2 லிட்டர் பால் அரிசி இலவசம் பெண்கள்இலவச பஸ் பயணம் வீடுகளுக்குஇலவசமின்சாரம் 200 யூனிட் என்றெல்லாம் அறிவித்த பிஜேபியை நம்பாமல் போலியான வாக்குறுதியை நம்பாமல் ஒட்டுமொத்த மக்களும் ஒன்று கூடி பி.ஜே.பிக்கு வாக்களிக்காமல் பிஜேபியை புறக்கணித்தார்கள்.

இப்பொழுது தெலுங்கானா சத்தீஸ்கர் மத்திய பிரதேசம். ராஜஸ்தான் மிஜோராம் போன்ற மாநிலங்களில் சட்டமன்ற தேர்தல் நடப்பதால் அந்த மாநிலங்களில் ஏராளமான திட்டங்களை அறிவித்து விட்டு வந்திருக்கிறார். 2014 இல் அறிவித்த திட்டங்கள் கிடப்பில் கிடக்கிறது 2016இல் எல்லா வீடுகளுக்கும் கழிப்பிட வசதி செய்து கொடுப்பதற்காக நிதி ஒதுக்கியிருப்பதாக சொன்னார்கள் ஆட்சிக்கு வந்தவுடன் இவர்களால் கட்டிக் கொடுக்கப்பட்ட அந்த கழிப்பிடங்கள் முறையாக தரமாக கட்டாமல் மூன்று ஆண்டுகள் நான்கு ஆண்டுகளிலேயே அவையெல்லாம் செயல்படுத்த முடியாமல் மக்கள் உபயோகப்படுத்த முடியாமல் மீண்டும் பொது வெளியில் கழிப்பிடமாக பயன்படுத்துகிறார்கள். இது ஒன்றிய அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறதா.

சுமார் 370 மாவட்டங்களில் ஆய்வு செய்யப்பட்டு 70 சதவீத மக்கள் கிராமங்களில் இருப்பவர்கள் கழிப்பிட வசதி செய்து கொடுத்தது சரியில்லை என்பதனை காட்டி எப்பொழுதும் போல் பொதுவெளியிலேயே நாங்கள் சொல்லுகிறோம் என்று கூறியிருக்கிறார்களே இதற்கு ஒன்றிய அரசு பதில் சொல்லுமா.

2019 இந்தியா முழுவதும் நீங்கள் அறிவித்த எந்த வாக்குறுதையும் மக்களுக்கு செய்து கொடுக்கவில்லை குறிப்பாக தமிழ்நாட்டில் எய்ம்ஸ் மருத்துவமனை கட்டுவதற்கு ஒரு 12 கோடி ரூபாயை ஒதுக்கிவிட்டு மதுரையில் எய்ம்ஸ் மருத்துவமனை எந்த விதமான பணியும் இன்னும் ஆரம்பிக்காமல் ஐந்தாண்டுகள் ஆகிவிட்டது இன்னும் எந்த பணியும் நடக்கவில்லை.

மகளிர் இட ஒதுக்கீட்டில் இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் மட்டும்தான் உள்ளாட்சி தேர்தலில் முதல் முறையாக 50 சதவீதம் இட ஒதுக்கீடு செய்து முறையாக அதை நடைமுறைப்படுத்தி பழங்குடி மக்கள் மலைவாழ் மக்கள் பட்டியலின மக்கள் உள் ஒதுக்கீடுகள் பிரித்து கொடுத்து பொதுவான பெண்கள் உட்பட 50சதவீதம் எங்கள் தமிழ்நாட்டில் மேயர்களாக

மாநகராட்சி தலைவர்களாக

பேரூராட்சி தலைவர்களாக

கிராம பஞ்சாயத்து தலைவர்களாக ஒன்றிய தலைவர்களாக

மாவட்ட பஞ்சாயத்து தலைவர்களாக மாவட்ட கவுன்சிலர்களாக

ஒன்றிய கவுன்சிலர்களாக

தமிழ்நாடு முழுவதும் அனைத்து நிலைகளும் இருக்கிற வார்டு கவுன்சிலர்கள் 50 சதவீத பெண்கள் இன்றைக்கு அற்புதமாக பணியாற்றி வருகிறார்கள்

எந்த சூழ்நிலையிலும் பெண்களை முன்னிலைப்படுத்தாத பி.ஜே.பி.யின் செயல்பாடுகள் தமிழ்நாட்டில் மகளிரை எந்த அளவுக்கு இழிவுபடுத்தி கேவலப்படுத்தி அவர்கள் கொடுமைகளை வெளியிலே சொல்ல முடியாத பத்திரிக்கைகளில் எழுத முடியாத தவறுகளை செய்தவர்களை நீங்கள் பி.ஜே.பி. கட்சிகள் வைத்துக் கொண்டு மகளிருக்காக பேசுவது உங்களுக்கு வெட்கமாக இல்லையா.

பெண்களை மானபங்கப்படுத்தி மிக இழிவாக வர்ணித்து செயல்பட்ட பி.ஜே.பி. கட்சி நிர்வாகிகள் நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டு கைது செய்யப்பட்டு சிறையிலேயே இருக்கிறார்கள் ஒரு சில பெண்கள் வெளியில் சொன்னால் கேவலம் என்று ஒதுங்கிக் கொண்டார்கள்.

இந்தியா முழுவதும் அரசு பணிகளில் தமிழ்நாட்டில் எப்படி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் எல்லா பணிகளிலும் தேர்வு செய்கின்ற பொழுது முப்பது சதவீத பெண்களுக்கு வேலை வாய்ப்பு என்கிற ஒரு அற்புதமான திட்டத்தை உருவாக்கி சட்டமாக இயற்றியதில் இருந்து தமிழகத்தில் இன்றுஎங்கு பார்த்தாலும் பெண் பணியாளர்கள் பெண் அதிகாரிகள் பெண் உயர் நிலையில் இருக்கிற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் காவல்துறை அதிகாரிகள் என்று ஏராளமான பேர் தமிழகத்தில் இருக்கிறார்களே அதற்கு வழிவகை செய்து உயர்த்திக் காட்டியவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

தமிழகத்தில் தலைவர் கலைஞர் அவர்கள் பெண்களுக்கு வேலைவாய்ப்பு உறுதிப்படுத்தியதால் தமிழகம் முழுவதும் பெண்கள் படிக்க முன் வந்தார்கள் பெண்உரிமையை காக்க தலைவர் கலைஞர் அவர்கள்தான் இந்தியாவிலேயே முதல்முதலாக 30%அரசு வேலைவாய்ப்பை வழங்கி சாதனை படைத்தார்கள்.

தமிழக அரசு செய்ததைப் போல் பி.ஜே.பி. ஒன்றிய அரசு இந்தியாவில் எல்லா பணிகளுக்கும் நேர்முகத் தேர்வு அரசு யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் பணிகள் நியமிக்கிற பொழுது 30 சதவீதம் இட ஒதுக்கீடு என்ற அடிப்படையில் கட்டாயம் ஆக்க வேண்டும் என்று பெண்களுக்காக சட்டத்தை பிஜேபி நிறைவேற்றுவதற்கு தயாரா?

திருவிழாக்களில் கோயில்களில் வேண்டுதல் நிறைவேறி விட்டால் வீடுகளில் ஆட்டுக்கிடாயை வாங்கி வளர்ப்பார்கள் அதை குளிப்பாட்டி பொட்டெல்லாம் வைத்து மாலை அணிவித்து மத்தளம் அடித்து ஊர்வலமாக அழைத்து வருவார்கள் அந்த ஆட்டுக்கு தெரியாது நம்மை இவ்வளவு மகிழ்ச்சியாக சந்தோஷமாக அழைத்துச் செல்கிறார்கள் என்று அந்த கோயில் வாசலுக்கு சென்ற பிறகுதான் தெரியும் நம்மை பலிகடாவாக்குவதற்காக அழைத்து வந்திருக்கிறார்கள் என்று அந்த நிலைப்பாட்டில் ஒரு சிலர் செயல்பாடு அது போல் உள்ளது.

●

# ஜப்பானில் தமிழ்நாடு சுற்றுலாத்துறை அரங்கு!

## அமைச்சர் கா.ராமச்சந்திரன் பார்வையிட்டார்!

ஒசாகா, அக்.29-

ஜப்பான் நாட்டின் ஒசாகா நகரில் நடைபெற்று வரும் ஒசாகா/கான்சாய் ஜப்பான் சுற்றுலா கண்காட்சி - 2023-ல் அமைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு சுற்றுலாத்துறையின் அரங்கினை பீகார் மாநில துணை முதலமைச்சர் தேஜஸ்வீ பிரசாத் யாதவ், சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் ஆகியோர் முன்னிலையில், ஜப்பானுக்கான இந்திய தூதர் சி.பி.ஜார்ஜ் திறந்து வைத்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சிறப்பான நடவடிக்கைகளால் தற்போது, இந்தியாவிலேயே சுற்றுலாத்துறையில் முதன்மை மாநிலமாக தமிழ்நாடு விளங்கி வருகின்றது. சுற்றுலாவை மேம்படுத்தும் வகையில் சர்வதேச செஸ் ஒலிம்பியாட் போட்டி, சர்வதேச அலைச்சறுக்கு போட்டி உள்ளிட்ட போட்டிகள் மாமல்லபுரத்தில் நடத்தப்பட்டு வருகின்றன. இதன் காரணமாக மாமல்லபுரம் சுற்றுலாத்தலம் உலகளவில் முக்கியத்துவம் பெற்று வெளிநாட்டவர்களால் அதிக அளவில் பார்வையிடப்படும் சுற்றுலாத் தலமாக தற்போது விளங்கி வருகின்றது.

தமிழ்நாடு சுற்றுலாத் துறை வெளிநாட்டு மற்றும் வெளிமாநில சுற்றுலா பயணிகளை கவரும் வகையில் தமிழ்நாடு சர்வதேச பலூன் திருவிழா, சர்வதேச பட்டம் விடும் திருவிழா, சென்னை திருவிழா, மாமல்லபுரத்தில் இந்திய நாட்டிய விழா உள்ளிட்ட பல்வேறு விழாக்களை நடத்தி வருகின்றது.

தமிழ்நாட்டில் உள்ள பழமையான சுற்றுலாத் தலங்கள், கோவில்கள், இயற்கை எழில் கொஞ்சும் மலைகள், நீர்வீழ்ச்சிகள், கடற்கரைகள் குறித்த கழுகுக்கண் பார்வை (TOP ANGLE VIEW) அனுபவத்தையும், சுற்றுலா பயணிகள் நேரில் சென்று பார்வையிட்டதைப் போன்ற அனுபவங்களையும் தரும் வகையிலான குறும்படங்கள் உலகமெங்கும் உள்ள சுற்றுலா பயணிகளை எளிதில் சென்றடையும் வகையில் யூடியூப், பேஸ்புக், எக்ஸ் (டிவிட்டர்), இன்ஸ்டாகிராம் உள்ளிட்ட சமூக வலைதளங்கள் மூலமாக தொடர்ந்து வெளியிடப்பட்டு வருகின்றன.

அதிக அளவில் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளை தமிழ்நாட்டிற்கு ஈர்ப்பதற்காக வெளிநாட்டு சுற்றுலா ஏற்பாட்டாளர்கள் பங்கு பெறும் இந்திய அளவிலான பயண சுற்றுலா சந்தைகள், வெளிநாடுகளில் நடைபெறும் பயண சுற்றுலா சந்தைகள் மற்றும் சுற்றுலா கண்காட்சிகளில் தமிழ்நாடு சுற்றுலாத்துறை யின் அரங்கம் அமைக்கப்பட்டு தமிழ்நாட்டின் சுற்றுலா சிறப்புகளை தெரிவிக்கும் குறும்படங்கள் திரை யிடப்பட்டும், புத்தகங்கள், சிறு கையேடுகள் ஆகியவை பயண ஏற்பாட்டாளர்கள், வெளிநாடுகளைச் சேர்ந்த சுற்றுலாத்துறையினர், பார்வையாளர்களுக்கு வழங்கப்பட்டும் கவன ஈர்ப்பு செய்யப்படுகின்றது.

ஜப்பான் நாட்டின் ஒசாகா நகரில் ஒசாகா இன்டெக்ஸ் அரங்கில் 26.10.2023 தொடங்கி 29.10.2023 வரை நடைபெற்று வரும் ஒசாகா /கான்சாய் ஜப்பான் சுற்றுலா கண்காட்சி - 2023-ல் (Tourism EXPO Japan 2023 OSAKA/KANSAI) தமிழ்நாடு சுற்றுலாத்துறையின் சார்பில் அரங்கம் அமைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டின் பாரம்பரியம், பண்பாடு மற்றும் கலாச்சாரத்தினை பிரதிபலிக்கும் வகையில் அமைக்கப்பட்ட இந்த அரங்கில் புகழ்பெற்ற ஸ்ரீரங்கம் குதிரைச் சிற்ப தூண்களின் மாதிரி வடிவம் அமைக்கப்பட்டு, மாமல்லபுரம் கடற்கரை கோவில் உள்ளிட்ட சுற்றுலாத்தலங்களின் புகைப்படங்களும், தஞ்சாவூர் தலையாட்டி பொம்மைகள் உள்ளிட்ட தமிழ்நாட்டின் புவிசார் குறியீடு பெற்ற கைவினைப் பொருட்களும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

தமிழ்நாடு சுற்றுலாத் துறையின் அரங்கினை பீகார் மாநில துணை முதலமைச்சர் தேஜஸ்வீ பிரசாத் யாதவ், சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் ஆகியோர் முன்னிலையில், ஜப்பானுக்கான இந்திய தூதர் சி.பி. ஜார்ஜ் திறந்து வைத்தார்.

தமிழ்நாட்டின் சுற்றுலாத்தலங்களின் சிறப்புகளை ஜப்பான் மொழியில் விளக்கங்களுடன் தெரிவிக்கும் புகைப்படங்கள் அடங்கிய புத்தகத்தினை சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு முதன்மைச் செயலாளர் டாக்டர். க.மணிவாசன் ஆகியோர் வெளியிட்டு கண்காட்சிக்கு வருகை தந்த ஜப்பான் நாட்டு சுற்றுலா பயணிகள் மற்றும் சுற்றுலா தொழில் முனைவோர்களிடம் வழங்கினர்.

இந்த அரங்கத்தை ஏராளமான வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் பார்வையிட்டு, தமிழ்நாட்டின் சிறப்புகளை அறிந்தனர்.




ஜப்பான் நாட்டின் ஒசாகா நகரில் நடைபெற்று வரும் ஒசாகா/கான்சாய் ஜப்பான் சுற்றுலா கண்காட்சி 2023ல் அமைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு சுற்றுலாத்துறையின் அரங்கினை பீகார் மாநில துணை முதலமைச்சர் தேஜஸ்வீ பிரசாத் யாதவ் , சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் ஆகியோர் முன்னிலையில், ஜப்பானுக்கான இந்திய தூதர் சிபி ஜார்ஜ் திறந்து வைத்தார். சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மை செயலாளர் டாக்டர்.க.மணிவாசன் உடன் உள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### திருச்சி ஏ.வி. கிருஷ்ணமூர்த்தி
### அக்டோபர் 29 (1995)



திருச்சி நகரக் கழகச் செயலாளராகவும் – நகர கூட்டுறவு வங்கியின் தலைவராகவும் பணியாற்றியவர்.

திருச்சி வெங்காயமண்டி பாரம் சுமக்கும் தொ.மு.ச. தலைவராகவும் – அண்ணா சிந்தனையாளர் பேரவைத் தலைவராகவும் பணியாற்றியவர்.

ஆங்கிலத்தில் சிறப்பாகச் சொற்பொழிவாற்றக்கூடியவர்.

கொள்கை உறுதியும் – அடக்குமுறைகளைத் தாங்கும் நெஞ்சுரமும் கொண்டு திருச்சியில் கழகத்தை வளர்த்த இனிய உடன்பிறப்பு என தலைவர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வடுவூர் இரா.சாமிநாதன்
### அக்டோபர் 29 (2013)



அரசு பள்ளி ஆசிரியராக பணியாற்றிய போது,கழகக் கொள்கையினால் ஈர்க்கப்பட்டு, அதன் காரணமாக ஆசிரியப் பணியை துறந்து கழகப் பணியாற்ற தொடங்கியவர்.

வடுவூர் கிளைச் செயலாளர், நீடாமங்கலம் ஒன்றிய அவைத்தலைவர் – செயலாளர், பொதுக்குழு உறுப்பினர் என பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

மன்னார்குடி நிலவள வங்கித் தலைவராக பதவி வகித்தவர்.

இந்தி எதிர்ப்பு போராட்டம், ஈழத் தமிழர் ஆதரவு போராட்டம் என கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**






தமிழ்மொழியைக் காப்பதற்கான போராட்டத்தில் ஈடுபட்டு, முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் 62 நாட்கள் தனிமைச் சிறையில் இருந்த பாளையங்கோட்டை அமைந்துள்ள நெல்லை மாவட்டத்தின் கழக மூத்த முன்னோடிகள் 1062 பேருக்கு தலா ரூ.10 ஆயிரம் பொற்கிழியை நேற்று முன்தினம் கழக இளைஞர் அணிச் செயலாளரும், அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார். விழாவினைச் சிறப்புற ஒருங்கிணைத்த நெல்லை கிழக்கு – மத்திய மாவட்டக் கழகத்தினருக்கு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்தையும், பாராட்டுக்களையும் தெரிவித்த இந்நிகழ்வில் மாவட்டச் செயலாளர்கள், கழக முன்னணியினர் பங்கேற்றனர்.

# கலைஞரும் நானும் 42

**"உவமைக் கவிஞர் சுரதா அவர்களால் 'பாதி அண்ணா' எனப் பாராட்டப்பட்டவர் என் தந்தையார் ஒளவை நடராசன். அவர் மீது அளப்பரிய அன்பும் மரியாதையும் கொண்டிருந்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். அதுபோல், என் பாட்டனார் உரைவேந்தர் ஒளவை துரைசாமி அவர்களுடனும் நல்ல தொடர்பில் இருந்தவர் முத்தமிழறிஞர் அவர்கள். இப்படி எனது பாட்டனார், தந்தையார் என தொடர்ந்து வந்த பிணைப்பு, என்னையும் குளிர்விக்கும் வகையில் அமைந்தது என்பது எனது பேறு என்பேன்".**

■ **ஒளவை அருள்,** இயக்குநர், தமிழ் வளர்ச்சித்துறை

## கற்றவர் விழுங்கும் கற்பகக் கனி!

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை எனது நினைவுகளில் 1973-ஆம் ஆண்டிலிருந்து தேக்கி வைத்திருக்கிறேன். அப்போது ஏழு அல்லது எட்டு வயதிருக்கும். சென்னை அண்ணா மேம்பாலம் திறப்பு விழாவில் எனது தந்தையாருடன் கலந்து கொண்டேன். அப்போது வானூர்தியில் இருந்து பூமழை தூவப்பட்ட காட்சியும், நடு வகிடு எடுத்த முத்தமிழறிஞரின் உருவமும் அழியாத கல்வெட்டாக நெஞ்சில் பதிந்துள்ளன. எனது இளவயது காலத்தில் இருந்தே, எந்தையாருடன் ஒவ்வோர் ஆண்டும் ஜனவரி முதல் நாள், தைப் புத்தாண்டு, முத்தமிழறிஞர் பிறந்த நாளான ஜூன் 3 ஆம் நாள் ஆகிய மூன்று நாட்களில் அவரைச் சந்திப்பதை வழக்கமாகக் கொண்டு மகிழ்ச்சியுறுவோம்.

அவரைச் சந்தித்த வேளைகள் அனைத்திலும் **'வேறு தளை விரவாத வெண்பாவைப் போல'** தமிழ் - தமிழர் - தமிழுணர்வு தவிர வேறொன்றும் விவாதித்ததில்லை அந்த வித்தகர்!

### குடும்பத்துக்கே பெருமை அளித்தவர்

எங்கள் குடும்பத்துக்குப் பெருமை செய்த பெருந்தகையாளர் கலைஞர். 1974-ஆம் ஆண்டில், சென்னையில் என் தந்தையார் ஒளவை நடராசன் ஏற்பாடு செய்த நிகழ்ச்சியில் சிறப்புரையாற்றிய கலைஞர், எந்தையாரின் உரை கேட்டு அவரை அடுத்தநாள் தலைமைச் செயலகம் வரவழைத்து தலைமைச் செயலகத்தின் செய்தித் துறையில் துணை இயக்குநர் பதவி வழங்கிச் சிறப்புச் செய்தார். அதன் பின்னர் ஆறு திங்கள் கழித்து மொழிபெயர்ப்புப் பிரிவில் இயக்குநர் பணி வழங்கி இதயம் குளிர்வித்த இனியவர் கலைஞர்.

எந்தையார் ஆற்றிய பணியினை அதே தலைமைச் செயலகத்தில் உள்ள மொழிபெயர்ப்புத் துறையில் இயக்குநர் பதவியினை 35 ஆண்டுகளுக்குப் பிறகு 2009-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 27 ஆம் நாளன்று இந்த 'அருளுக்கு' வழங்கி அருளிச் செய்தவரும் முத்தமிழறிஞர் கலைஞர்தான். அதை நினைவு கூரும்போது, நெல்லிக்காய் சுவைத்து நீர்குடித்த மாதிரி எப்பொழுதும் இதயம் இனிக்கிறது. இதுகாறும் யாரும் பெறாத அரிய பரிசில் என்று என் தாயார் மருத்துவர் தாரா நடராசன் சொல்லிச்சொல்லி மகிழ்வார்.

என் தந்தையாருக்கும், எனக்கும் மகிழ்ச்சியையும் அன்பையும் கொட்டிக் கொடுத்தவர் கலைஞர். தமிழுக்கு உழைப்பவர்களை அவர் கைவிட்டாரில்லை, உய்வித்தார் என்பதை உணர்வாளர்கள் அறிவர். என் தந்தையாருக்கு தமிழ்நாடு அரசின் பேரறிஞர் அண்ணா விருது, கலைமாமணி விருதுகளோடு வாய்ப்புக் கனியும் போதெல்லாம் வானுயரப் போற்றி வனப்புச் செய்தவர் வண்டமிழ்க் கலைஞர். தந்தைக்குக் கிடைத்த தனிப்பெருஞ் சிறப்பு அவர்தம் சிந்தையைத் தாங்கிய சிறியோர்க்கும் கிட்டியது, காலம் தந்த பரிசன்று - கலைஞர் தந்த பரிசு.



### சரியான நேரத்தில் சரியாக செய்கை

'சரியான செயல்களைச் செய்பவர் தலைவர். செயல்களைச் சரியாகச் செய்பவர் மேலாளர்' என்ற பீட்டர் டிரக்கர் (PETER DRUKER) என்ற மேனாட்டு அறிஞர் கூற்று. அதற்கு ஒப்ப, தலைவர்கள் ஏத்தும் தலைவரான கலைஞர் சரியான செயல்களைச் சரியான தருணத்தில் சரியாகச் செய்து சரியாத புகழ் பெற்றவர்.

**தலைமேல் வைத்துத் தமிழர்கள் கொண்டாடும் வள்ளுவரை, மலைமேல் வைத்துக் கொண்டாடிய அந்த மாமனிதர்!**

2006-ஆம் ஆண்டு என் பாட்டனார் உரைவேந்தர் ஒளவை துரைசாமி அவர்களின் நூல்களை நாட்டுடைமையாக்கம் செய்தபொழுது எந்தையாருடன் பெருங்குடும்பமாக நாங்கள் அனைவரும் சென்று நன்றி பாராட்டியதைக் கண்டு முத்தமிழறிஞர் கலைஞர் பெருமகிழ்வுற்றார். அப்போது உடல்குளிர உயிர்தழைக்க உணர்ச்சி ஓங்க எந்தையாரிடம் அவர் உரையாடிய ஒவ்வொரு சொல்லையும் வைரப்பேழையில் வைத்தது மாதிரி எண்ணப்பேழையில் எழுதி வைத்திருக்கிறேன். **'கற்றவர் விழுங்கும் கற்பகக் கனி'** என்ற சொல்லாடல் கலைஞருக்கே பொருத்தம் என்று பல நேரங்களில் முடிவு செய்து முகம் மலர்ந்திருக்கிறேன்.

### மேடைகளில் கண் பார்வை

தமிழ்நாடு ஆசிரியர் கல்லூரிகளின் சார்பாக 2007-ஆம் ஆண்டு நடைபெற்ற வாழ்த்தரங்கத்தில் முத்தமிழறிஞர் கலைஞரை வரவேற்று, தொகுப்புரை வழங்கும் வாய்ப்புக் கிட்டியது. தண்ணமுத மதியாக, தமிழ் தந்த நிதியாக, தமிழரின் கதியாக அவரை உருவகித்து கவிதை பாடினேன். மேடையை விட்டுப் புறப்படும் பொழுது என்னைத் தனியாக அழைத்த அந்தத் தமிழ்வேந்தர், பழம்பிழிந்து வைத்தாற்போல் பாசத்தைப் பிழிந்து பாராட்டிச் சென்றார்.

கோவையில் நடைபெற்ற உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டின் ஓர் அங்கமான தமிழ் இணைய மாநாட்டினை 2010-ஆம் ஆண்டில் தொகுப்புரைக்கும் வாய்ப்புக் கிடைத்தது. அப்போதும் என்னைப் பார்த்து அகமகிழ்ந்து வாழ்த்திச் சென்றார்.

செம்மொழி மாநாட்டு மலரில் என் தந்தையாருடன், நானும் கட்டுரை எழுதி இருந்தேன். எனது மாமா பேராசிரியர் இரா.குமரவேலன், சித்தப்பா டாக்டர் மெய்கண்டன் ஆகியோரும் எழுதி இருந்தனர். அதைப் பார்த்த முத்தமிழறிஞர் "உரைவேந்தர் கட்டுரையையும் சேர்த்திருக்கலாம்ல" எனக் கேட்டார். அந்த நினைவுகள் இப்போதும் பசுமைபோர்த்தி நிற்கின்றன. முத்தமிழறிஞர் கலைஞரின் நூல் வெளியீட்டு விழாக்கள், கவியரங்கங்கள் உள்ளிட்ட நிகழ்ச்சிகள் எவையெனினும் எந்தையார் பங்கேற்கும் எளியேனின் இருப்பும் இல்லாமல் இருந்ததில்லை.

2010-ஆம் ஆண்டில், என் தந்தையார் எழுதிய 'அருளுக்கு ஒளவை சொன்னது' என்ற நூல் வெளிவந்தது. அந்த நூலுக்கு வெளியீட்டு விழா எதுவும் நடைபெறவில்லை. ஆனால், பல இதழ்களில் நூலின் மதிப்புரைகள் வெளிவந்து கொண்டிருந்தன. 'துக்ளக்' இதழில் மதிப்புரை வந்த அடுத்த நாள் மாண்புமிகு முதலமைச்சரின் செயலாளராக இருந்த இராஜமாணிக்கம் அவர்கள், 'நூலை எடுத்துக் கொண்டு உடனே முதல்வர் அறைக்கு வா' என அழைத்தார். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களைச் சந்தித்த அந்த வசந்தத் தருணமும் வணக்கத்துக்குரிய வரலாற்றுத் தருணமாக அமைந்தது.

### ஆற்றுப்படுத்தல் என்கிற அன்பு

ஒருமுறை எனது தந்தையாரும், தாயும் நிகழ்ச்சிக்காக நெல்லை சென்றபோது, ரயிலில் குளிர்தாங்க முடியாமல் உடல்நலிவுற்று, மதுரையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தனர். எனக்குத் தகவல் வந்து காலையில் மதுரை சென்று சேர்ந்த நேரத்தில், எனது அலைபேசிக்கு முதல் அழைப்பாக முத்தமிழறிஞரிடமிருந்து அழைப்பு வருகிறது. "ஒளவை எப்படி இருக்கிறார்?" என அன்பொழுகக் கேட்ட அந்தக் குரல் இப்போதும் என் காதுகளில் ஒலிக்கிறது.

அதே பற்றினை கலைஞர் மீது என் தந்தையார் கொண்டிருந்தார். கலைஞரின் இறுதி நாட்களிலும், அவரால் பேச முடியவில்லை என்றபோதும் என் தந்தையார் மிகுந்த துயருற்றார். கலைஞர் மறைவுற்றார் எனக்கேட்டு கண்ணீர்விட்டு நிம்மதியிழந்த நாட்களில் அவரைத் தேற்றுவதே பெரும்பாடானது.

தலைமேல் வைத்துத் தமிழர்கள் கொண்டாடும் வள்ளுவரை, மலைமேல் வைத்துக் கொண்டாடிய அந்த மாமனிதர் 'உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்' என்கிற குறள்நெறியே வாழ்ந்தார். அவரிடம் அளவளாவும் நிமிடங்கள் அத்தனையும் பூவுக்கு நிகராக மணக்கும். பொன்னுக்கு நிகராகக் கனக்கும்! அவரது கடைக்கண் பார்வை பரப்பளவில் பதியும் பேறு பெற்றவன் என்னும் பெருமிதமே எனக்கு வாழ்நாளெல்லாம் அகமகிழ்வு அளிக்கும்.

...பகிர்வார்கள்

---

## அதனால்தான் அவர் பெரியார்!

'கடவுள்களை வழிபடுவோரும் பெரியாரை விரும்புவது ஏன்?' என்பது புரியாமல் பா.ஜ.க.காரர்கள் மண்டையைப் பிய்த்துக் கொண்டு அலைகிறார்கள்.என் குடும்பத்தில் அனைவருமே கடவுள் நம்பிக்கை உடையோரே. ஆனால், யாரும் பெரியாருக்கு எதிராக இதுவரை பேசியதில்லை. என் தாத்தா, அப்பா வாங்கிய புத்தகங்களில் கோவில்கள் பற்றிய தல வரலாற்று நூல்களும் உண்டு, பெரியார் பற்றிய புத்தகங்களும் உண்டு. பொதுவாக சராசரி தமிழ்மக்களின் நிலை இதுதான். மதுரையில் கள்ளழகரை ஆற்றில் இறக்கி நீராடச் செய்து விட்டு நேரே வாக்குச்சாவடிக்குப் போய் ஒரு திராவிட கட்சிக்கு வாக்களித்துச் செல்வதை அவர்களால் விளங்கிக் கொள்ளவே முடியவில்லை.

ஏனெனில் தமிழனுக்கு, இந்த தொண்டுக் கிழவன் மூத்திரச் சட்டியைத் தூக்கிக் கொண்டு தொண்ணூறு வயதுகளில் ஊர் ஊராகச் சுற்றித் திரிந்தது நமக்காகத்தான் என உறைத்திருக்கிறது. பெரியாரை மதவாதிகள் எப்படியாவது வீழ்த்திவிட வேண்டும் என்று பல்வேறு முயற்சிகளில் ஈடுபடும்போது 'நம் ஆளை எவனோ ஒருவன் வந்து களங்கப்படுத்தப் பார்க்கிறான்' என்கிற உணர்வு அவர்களுக்குள் எழுகிறது. காரணம் இதுதான்.. தமிழ்நாட்டில் மதம் வேறு, ஆன்மிகம் வேறு, சமூகம், அரசியல் என்பவை வேறு. இந்தத் தெளிவை பெரியார் சரியாக உருவாக்கியிருக்கிறார். தமிழ்நாட்டு மக்கள் தாங்கள் அறியாமலேயே தம்முள் பதிந்து கிடக்கும் பெரியாரின் கருத்துகளால் வழிநடத்தப்படுகிறார்கள்.

அவர் மனித விடுதலையைப் பேசினார்; பெண் விடுதலையைப் பேசினார்; தீண்டாமையைச் சாடினார்; மூட நம்பிக்கைகளைச் சாடினார்;

ஒட்டுமொத்தமாக அவர் சமுக நீதிக்காகப் பாடுபட்டார். கடவுள் மறுப்பு என்பது அதில் ஒரு சிறு பகுதி மட்டுமே. இதனால்தான் இது பெரியார் மண்!

**-ஜெயராமன் என்பவரின் ஃபேஸ்புக் பதிவு**

## ஃப்ளாஷ்பேக்



### 'தொழிலாளர்' அண்ணா!



அருண்குமார்

திருச்சி 'பெல்' நிறுவனத்தில் பணிபுரிந்த என் தந்தை ஆசைத்தம்பி அவர்கள் தொழிலாளர் முன்னேற்ற சங்கத்தில் 25 ஆண்டுகளாகப் பல்வேறு பொறுப்புகளை வகித்து 2002-ஆம் ஆண்டு தலைவர் பொறுப்பை எட்டியிருந்தார். கழகத்தின் மீது கொண்ட பற்றின் காரணமாக அங்கு அண்ணா சிலை நிறுவ தொ.மு.ச சார்பாகத் திட்டமிட்டு, 2002 மார்ச் 11 அன்று அன்றைய இளைஞர் அணிச் செயலாளர் தலைவர் தளபதி அவர்கள் வருகை தந்து பேரறிஞர் அண்ணா சிலையைத் திறந்து வைத்தார். மேலும் இதே கூட்டத்தில் என் தந்தை அவர்களின் 25 ஆண்டு கால பணியைப் பாராட்டி சால்வை அணிவித்து வாழ்த்தினார்.

**-ஆ.அருண்குமார், உறையூர், திருச்சி மத்திய மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

### கருவூலம்

**வேதனையுடன் கண்டனம்**

**1992-ஆம் ஆண்டு தடா சட்டத்தை எதிர்த்து தலைவர் கலைஞர், பேராசிரியர், நாஞ்சில் மனோகரன், பொருளாளர் சாதிக் ஆகியோர் மாபெரும் கண்டனப் பேரணி நடத்தி, தமிழ்நாடு ஆளுநரிடம் மனு அளித்தனர். உ.பி.யில் பாபர் மசூதி இடிப்புச் சம்பவத்தைக் கண்டித்து நடைபெற்ற அனைத்துக் கட்சிப் பொதுக் கூட்டத்தில் கலைஞர் மிக்க வேதனையுடன் கண்டனம் தெரிவித்தார்.**

---

## திராவிடத்தால் வாழ்கிறோம் 284




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131